Dilka Watch Works
SPECIALIST IN WATCHREPARING
யாழ் நகரில் சகலவித மணிக்கூடுகளையும் சிறந்த முறையில் திருத்திக்கொள்ள...
8174
டில்கா வாச் வேக்ஸ்
. பஸ் நிலைய எதிர் மேல்மாடி .
404/1, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

★ பக்கங்கள் 8 விலை சதம் 40

ஈழநாடு

EELANADU

மலர் 21 மார்கழி 13 ஸபர் 8 இதழ் 319
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 28-12-7

SRI LANKA
RECEIVED
28-12-28
PERIODICALS DIVISION
LIBRARY

சுத்தத்திற்கும் சுவைக்கும் புகழ்பெற்ற சைவ ஹோட்டல்
தேவி விலாஸ்
சுத்தம், சுவை,
அன்பான உபசரிப்பு!
சைவபோசனகாரர் மனதில் என்றும் நிலைத்திருக்கும்
தேவி விலாஸ்
(வண்ணைச் சிவன் கோவில் சந்தி)
288 காங்கேசன்துறை வீதி-
யாழ்ப்பாணம்,

பனம்பொருள் அபிவிருத்தியினால் வேலைவாய்ப்பு அதிகரிப்பு; வெளிச் செலாவணி லாபம்

கண்காட்சி திறப்புவிழாவில் மாவட்ட அமைச்சர் மகிழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

[illegible] அபிவிருத்[illegible] ஆரம்பிக்கப்பட்டதால் இந்நாட்டின் வேலையில்லாப்பிரச்னை ஓரளவு தீர்க்கப்பட்டுள்ளதுடன் வெளிநாட்டு நாணயத்தையும் சம்பாதிக்கக் கூடியதாக இருக்கிறது.

இவ்வாறு யாழ். மாவட்ட அமைச்சர் திரு. யூ. பீ. விஜயகோன் பனம்பொருள் கண்காட்சியைத் திறந்துவைத்துப் பேசுகையில் கூறினார்.

பனம்பொருள் கண்காட்சி யாழ் மத்திய கல்லூரியில் ஆரம்பமாயிற்று

மேற்படி வைபவத்தில் யாழ் அரசாங்க அதிபர் திரு. யோகேந்திரா துரைசுவாமி பனம்பொருள் அபிவிருத்திச் சபை பதில் தலைவர் திரு கனகசூரியர், யாழ் விற்பனைத் திணைக்கள உதவி ஆணையாளர் பாலசிங்கம், யாழ். மாவட்ட விவசாய விஸ்தரிப்பு அதிகாரி செயமுத்துலிங்கம், யாழ். மேலதிக அரசாங்க அதிபர் பஞ்சலிங்கம் மற்றும் உயர் அதிகாரிகளும், தொழில் அதிபர்களும் கலந்துகொண்டனர்.

கண்காட்சியில் முழுக்க முழுக்கப் பனம்பொருட்களினால் தயாரிக்கப்பட்ட வீட்டுப் பாவனைப் பொருட்கள், அலங்காரப் பொருட்கள், செயற்கை மிருகங்கள், வகுடிகள், செருப்பு வகைகள், கரும்பட்டி, பனை ஓலையினால் செய்யப்பட்ட செய்யப்பட்ட மாதிரிகள் முதலியன காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன.

அன்ருடம் வீட்டுத் தேவைக்குப் பாவிக்கக் கூடிய சீனியை எப்படி வீட்டிலிருந்து கொண்டே செய்வது என்பது பற்றி ஆசிரியர் பரநிருபசிங்கம் செய்முறைப்படி செய்து காட்டி விளக்கங்கொடுத்தார்

பனை ஏறும் யந்திரமும் காட்சியில் வைக்கப்பட்டது பனை ஓலைகளை யந்திரத்தின் மூலம் எப்படி வாருவது என்பது பற்றியும் விளக்கம் கொடுத்தார்

பனம் பழத்தினால் தயாரிக்கப்பட்ட பணாட்டு சோடா ஆகியவை மாவட்ட அமைச்சருக்கு வழங்கப்பட்டன

மாவட்ட அமைச்சர் தொடர்ந்து பேசுகையில், 1978ம் ஆண்டு பனை அபிவிருத்திச் சபை ஆரம்பிக்கப்பட்டது அதன் தலைவராக திரு கே. நித்தியானந்தா நியமிக்கப்பட்டார். தற்போது பதில் தலைவராக திரு கனகசூரியர் நியமிக்கப்பட்டார், அவர் அப்பதவிக்கு நியமிக்கப்பட்ட பின் பனம்பொருள் அபிவிருத்தியில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது என்றார்.

அனலைதீவுக்கு அரச படகுச் சேவை

சனிக்கிழமை ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறைக்கும் அனலைதீவுக்குமான அரச படகுச் சேவை நாளை சனிக்கிழமை காலை யாழ்ப்பாண அரசாங்க அதிபர் திரு. யோகேந்திர துரைசுவாமியால் ஆரம்பித்து வைக்கப்படும்.

இவ்வைபவத்தை யொட்டி பொதுவரவேற்பொன்று, அனலைதீவு மக்களால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

நீண்டகாலமாக அனலைதீவு மக்கள் அனுபவித்துவந்த போக்குவரத்து இன்னல்கள் புதிய அரச படகுச்சேவை மூலம் நீங்கியுள்ளது. இச்சேவை நாளொன்றுக்கு மூன்றுமுறை நடைபெறுமென எதிர்பார்க்கப்படுகிறது. (செ)

தமிழக அறிஞர் தம்பதிகள் இன்று வருவர்

(யாழ்ப்பாணம்)

காரைநகர் மணிவாசகர் சபையின் 25வது விழாவினை ஆரம்பித்து வைத்து சிறப்புச் சொற்பொழிவாற்றும் பொருட்டு தருமை ஆதீனப் பல்கலைக் கல்லூரிப் பேராசிரியர் வித்துவான் இரா. செல்லக்கணபதியும் அவரது துணைவியார் புலவர் சந்திரா செல்லக்கணபதியும் நேற்று மாலை கட்டுநாயக்கா விமான நிலையத்தை வந்தடைந்தனர் காரைநகர் மணிவாசகர் சபை உறுப்பினர்களும் காரைநகர் அபிவிருத்திச் சபை உறுப்பினர்களும் இவர்களை வரவேற்றனர். இன்று பகல் புகையிரத மூலம் யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்தை வந்தடையும் இவர்களை இங்கு வரவேற்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன

இலங்கைப் பல்கலைக்கழகங்களின்
வெளிநிலைப் பட்டப் பாடநெறிகளைப்
பின்பற்றவுள்ள மாணவர்களுக்கு ஓர்

எச்சரிக்கை!

கடந்த மூன்று ஆண்டு காலமாக வெளிவாரிப் பட்டப்படிப்புக்களை மிகச் சிறந்த முறையில் நடாத்திவரும் வெளிவாரிப் பட்டப் படிப்புக்கள் நிறுவனத்தில் அனுமதிகோரவிரும்பும் மாணவர்கள் போலிவிளம்பரங்களால் ஏமாறக்கூடாது என்று எச்சரிக்க விரும்புகிறோம்!

இலங்கை, இந்திய பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப்படிப்புகளை பயில்வதற்கு இப்பொழுதுவிண்ணப்பங்கள் ஏற்கப்படுகின்றன

விபரங்களுக்கு எழுதவும்:

வெளிவாரி பட்டப்படிப்புகள் நிறுவனம்,

148/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்,
தொலைபேசி: 7715

உலகம் முழுவதும் செயற்படும் பாரிய சமூக ஸ்தாபனம்

ரோட்டறிக் கழகத் தலைவர் பெருமிதம்

(யாழ்ப்பாணம்)

''நான்கு அங்கத்தவர்களுடன் ஆரம்பிக்கப்பட்ட ரோட்டறிக் கழகம், மக்களுக்கு தன்னலமற்ற; சிறந்த சமூக சேவையாற்றி 75 ஆண்டுகளில் உலகம் முழுவதும் பரந்து இன்று உலகிலே பாரிய சமூக சேவையாற்றும் நிறுவனமாக திகழ்கின்றது ''

இவ்வாறு யாழ்ப்பாணம் பிரதம தபால் நிலையத்தில் நேற்றுக்காலை நடைபெற்ற ரோட்டறிக்கழக 75வது ஆண்டு நிறைவைக் குறிக்கும் முத்திரை வெளியீட்டுவிழாவிற்கு தலைமைவகித்து உரையாற்றிய யாழ் ரோட்டறிக் கழகத் தலைவர் திரு. வே. குணரெட்ணம் குறிப்பிட்டார்.

1979
1929
ROTARY

ரோட்டறிக்கழக முதல்நாள் ஞாபகார்த்தமுத்திரை

முதல் ஞாபகார்த்த முத்திரையை யாழ் பிரதம தபால் அதிபர் திரு. எம். பாலசிங்கத்திடமிருந்து யாழ்ப்பாணம் எம். பீ திரு. வெ. யோகேஸ்வரன் வாங்கி விற்பனையை ஆரம்பித்து வைத்தார். அவரைத்தொடர்ந்து யாழ் மாநகரசபை பதில் முதல்வர் திரு எப் எக்ஸ் சேவியர், யாழ் பல்கலைக்கழகத் தலைவர் டாக்டர் சபாரத்தினமும் முத்திரைகளை வாங்கினர்.

திரு. குணரெத்தினம் தொடர்ந்து உரையாற்றுகையில் 1904ம் ஆண்டு உருவாக்கப்பட்ட ரோட்டறிக்கழகம், 151 நாடுகளில் 18415 கழகங்களைக் [illegible]

வரி விளம்பரம்

விற்பனைக்கு

கோப்பாய் இராச வீதியில் வெலிகடன் பாலத்துக்கு அருகில் 5பரப்பு தோட்டக்காணி வீட்டுடன் விற்பனைக்குண்டு விபரங்களுக்கு: செல்வி ஞா. தவரத்தினம், பழைய தெரு, கோப்பாய்த்தெற்கு கோப்பாய் 4498

EN 6251 இலக்க Austin A-50 Cambridge கார் நல்ல நிலையில் விற்பனைக்குண்டு. Dr வே யோகநாதன், 124, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். 4483

தேவை

டார்க்ரூம் பிரிண்டிங், என்லாச்சிங் தெரிந்தவர் நற்சாட்சிப்பத்திரத்துடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 4496 மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். 4496

இ. சிவசுப்பிரமணியம்,
சட்டத்தரணியும்
நொத்தாரிசும்,
திருநெல்வேலி தெற்கு,
யாழ்ப்பாணம்.

பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றம்

மரணசாதனமின்றி மரணித்த உரும்பிராய் மேற்கு வேலாயுதர் நாகேந்திரனின் ஆதனம் சம்பந்தமும் மற்றும் பெறுமதிகளும் சம்பந்தப்பட்ட விடயத்தில்

நாகேந்திரன் கைம்பெண் வேதபுஷ்பம் சிவவாசா, உரும்பிராய் மேற்கு, உரும்பிராய்
மனுதாரர்

மரணசாதன நிர்வாகபத்திரம் இல 3493/த

மேலேயுள்ள இலக்கத் தொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணச்சொத்தை நிர்வகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் மேற்குறிப்பிட்ட பின்னுறுதிக்கட்டளை பதியப்பெற்றுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1980-ம் ஆண்டு தை மாதம் 11-ந் நாளன்று முற்பகல் 10-00மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி இவ்வாறு பதிவாகிவிட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றானதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் வேண்டப்படுகின்றார்.

நீதிமன்றக் கட்டளைப்படி
ஒப்பம்
செ. பாக்கியநாதன்,
பதிவாளர்

13-11-79. 4406

மாணவருக்கு சலுகை

(கொழும்பு)

வேலை பார்த்துக்கொண்டு பல்கலைக்கழகங்களில் கல்வி பயிலும் மாணவர்களுக்குச் சலுகைகளை வழங்க கல்வி உயர்கல்வி அமைச்சு முன்வந்திருப்பதாக அகில இலங்கை முஸ்லிம் மகாநாட்டுக் கூட்டமொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வெ)

மலேரியா

(நிந்தாவூர்)

நிந்தாவூர்ப்பகுதியில் மலேரியா நோய் அதிகவேகமாகப் பரவி வருகின்றது. (வெ)

இன்று

மகாஜனன்ஸ் உதைபந்தாட்டப் போட்டி

(தெல்லிப்பழை)

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தினரால் அமைக்கப்பட்ட 'மகாஜனன்ஸ் விளையாட்டுக் கழகம்', உதைபந்தாட்டப் போட்டி ஒன்றை யாழ் மாவட்டத்தில் நடாத்தி வருகிறது.

இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் நடைபெறவிருக்கும் உதைபந்தாட்டப் போட்டியில் 'மகாஜனன்ஸ் விளையாட்டுக் கழகத்தை' எதிர்த்து, யாழ். இளைஞர் தெரிவுக்கோஷ்டி மோதும்.

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மைதானத்தில் இப்போட்டி நடைபெறவிருக்கிறது.

பெயர் மாற்றம்

யாழ் மாவட்டம் பச்சிலைப்பள்ளிப் பிரிவைக் கொண்ட உடுத்துறைக் கிராமத்தைச் சேர்ந்தவரும், தற்போது ஆழியவளையில் வசிப்பவருமாகிய, முருகேசு சபாரத்தினம ஆகிய நான் இவ்வறிவித்தல் பிரசுரமாகிய நாளான இன்றிலிருந்து, சிறீலங்கா ஜனநாயக சோஷலிச குடியரசின் பெயர் மாற்ற சட்டவாக்கத்திற்கமைய, முருகேசு சபாரத்தினம்பிள்ளை என பெயர் மாற்றம்செய்துள்ளேன் என்பதை இத்தால் அறிவிக்கின்றேன்.

ஒப்பம்:
மு. சபாரத்தினம்பிள்ளை
ஆழியவளை.

27-12-79 4499

தங்கப்பதக்கம் பெற்றார்

யாழ்ப்பாணம் விவேகானந்தசபை அகில இலங்கை ரீதியில் நடாத்திய நாவலர் பேச்சுப் போட்டியில் முதலாவது இடத்தைப் பெற்று தங்கப்பதக்கத்தைப் பெற்ற நடேஸ்வராக் கல்லூரி மாணவி பூங்கொடி இராசரத்தினம்.

பிச்சைக்காரர் தொல்லை

(மன்னார்)

மன்னார் பஸ்நிலையத்தில் பிச்சைக்காரர்களின் தொல்லை அதிகரித்துள்ளது. எட்டு வயதிற்கும் பன்னிரண்டு வயதிற்கும் இடைப்பட்ட சிறுவர்களே பிச்சையெடுத்து பஸ் பிரயாணிகளை தொல்லை செய்து வருகின்றனர்.

ஏமாற்றமளித்த 50 சத தேங்காய்!

(மாவிட்டபுரம்)

மாவிட்டபுரம் விற்பனை அபிவிருத்திக்கிளைகளில் மக்களுக்கு 50 சதத்திற்கு விற்கப்படும் தேங்காய் வராததால் இப்பகுதி பொதுமக்கள் பெரிதும் ஏமாற்றமடைந்துள்ளனர்.

விற்பனை அபிவிருத்திக் கிளைகளில் 50 சதத்திற்கு தேங்காய் விற்பதாகவும், அந்த தேங்காய்கள் விற்பனை அபிவிருத்திக் கிளைகள் சகல கிளைகளுக்கும் அனுப்பப்படுமெனவும் அறிவிக்கப்பட்டிருந்தது. இதனையடுத்து இத்தேங்காய்களுக்காக மாவிட்டபுரம் விற்பனை அபிவிருத்திக் கிளைக்குச் சென்ற மக்கள் கடைக்குச் சென்ற இப்பகுதிமக்கள் ஏமாற்றமடைந்தனர்.

''அறவாழ்வும் பயிற்சி முகாம்கள் மனிதனை மனிதனாக வாழவைக்கிறது''

பயிற்சிக் கூட்டத்தில் ஜோர்ஜ்விலவி

(யாழ்ப்பாணம்)

''அறவாழ்வும் பயிற்சி முகாம்கள் மனிதன் மனிதனாக வாழவும், மற்றவர்களை வாழவைக்கவும் பயிற்சியளிக்கிறது.''

இவ்வாறு கோப்பாயில் அறவாழ்வுப் பயிற்சி முகாமில் நடைபெற்ற பயிற்சியின் போது பேசிய ஜோர்ஜ்விலவி மேற்கண்டவாறு கூறினார்.

மேற்படி பயிற்சிக் கூட்டம் திரு. ஆ. வேலுப்பிள்ளை தலைமையில் நடைபெற்றது. திரு. ஜோர்ஜ்விலவி தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

''இதுபோன்ற பயிற்சி முகாம்கள் உலகின் பல பாகங்களிலும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதன்மூலம் பல்லாயிரக்கணக்கான மக்கள் பயிற்சி பெற்று வருகின்றனர் என்றார்.''

ச. வே. ரவின் பகுத்தறிவு முகாமைச் சேர்ந்த திரு. [illegible] பேசுகையில், கூறியதாவது:-

''அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் வாழுகின்ற இளைஞர்கள் 18 வயதுக்குப்பின் ராணுவத்தில் சேர்ந்து பயிற்சி பெறவேண்டுமென்று சட்டம் இருந்தபோதும் அவர்கள் ராணுவ முகாமில் சேருவதை விட அறவழிப் பயிற்சிமுகாம்களில் சேர்ந்து பயிற்சிபெறவே விரும்புகிறார்கள்.

உலகத்தின் பல பாகங்களிலும் வாழுகின்ற இளைஞர்கள் தாமாகவே சிந்திக்கத் தொடங்கிவிட்டனர். அதனால் தான் இவ்விளைஞர்கள் ராணுவத்தில் சேர்ந்த நாட்டுக்காக அமைதியான சமூக திருச்சேவை செய்யக்கூடிய டாக்டர்களாகவும், தாதிகளாகவும், ஆசிரியர்களாகவும் பயிற்சிபெற விரும்புகிறார்கள்.

ராணுவமுகாமிலிருந்து முழுக்க முழுக்க வேறுபட்ட பயிற்சிகளை வழங்குகின்ற புரட்சிமுகாம்தான் அறவழிப் பயிற்சிமுகாம். அதனால் தான் இளைஞர்கள் இம்முகாமில் சேர்ந்து பயிற்சிபெற உலகில் வாழுகின்ற பல்வேறுபட்ட சமூகங்களுடனும் வாழ விரும்புகிறார்கள்.

''உலகில் வாழுகின்ற மக்களில் 63 வீத மானவர்கள் 30 வயதுக்குட்பட்ட இளைஞர்களே. இவர்களை அறிவு குறைந்தவர்கள் என்றும், சிந்திக்கத் தெரியாதவர்கள் என்றும் இதனால் இவர்களைச் சிறுபான்மையினரென்றும், மீதியான 32 வீத மானவர்களே பெரும்பான்மையினரென்றும் கணிக்கப்படுகிறது. இதனை எமது முகாம் ஏற்றுக் கொள்ளவில்லை. இவர்களின் உரிமைகளுக்காகவும் எமதுமுகாம் போராடுகின்றது.

''உயர்ந்தவர்கள் - தாழ்ந்தவர்கள், படித்தவர்கள் - பாமரர்கள், பணக்காரர்கள் - ஏழைகள், கறுத்தவர்கள் - வெள்ளையர்கள் என்று பிரிந்து மக்கள் தனித்தனியாக வாழுகின்றனர். மனிதர்கள் தனித்து வாழ்வதால் அவர்கள் மிருகங்களாகக் கணிக்கப்படுகிறார்கள். இந்த நிலையை மாற்றி ஒன்றிணைந்து உலகத்தில் வாழுகின்ற மக்கள் எல்லோரும் ஒரே இனம் என்பதைக் கற்பிப்பதும், மனிதனை மனிதனாக வாழப் பழக்குவதுமே எமது பயிற்சிமுகாமின் நோக்கம்'' என்று கூறினார்.

திருமதி வில்லியம் விலடி பேசுகையில் கூறியதாவது:

'அமெரிக்காவில் அறவழிப் பயிற்சிமுகாம்கள் பரந்து கிடக்கின்றன. இம்முகாம்களின் மூலம் மக்கள் ஒற்றுமையாகவும் கூட்டுறவாகவும் வாழக் கற்றுக்கொள்கிறார்கள். முகாம்கள் தற்போது புரட்சி வழியில் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. புரட்சிமூலம் மக்கள் எப்படி சமத்துவமாக வாழவேண்டும் என்பதும் கற்பிக்கப்படுகிறது.

யாழ்ப்பாணம் ஒரு சிறந்த நாடு. இங்கு நான் ஒரு அங்கமாக இருப்பதில் பெருமை அடைகிறேன்.

மனிதனுக்குத் தேவையான உணவு இருப்பிடம் இவைகள் இம்முகாமில் கிடைக்கிறது. உடைகள் மட்டும்தான் எமக்கு இங்கு கிடைப்பதில்லை. அதுவும் விரைவில் இந்த உற்பத்தி செய்ய முடியும். எமக்குக் கிடைப்பதே போதும் என்ற [illegible] வாழ [illegible] வேண்டும். அதை இந்த முகாம் கற்றுக்கொடுக்கிறது'' என்று கூறினார். (வே)

வவனியா நகரசபை வரவேற்பளிக்கும்

(வவுனியா)

வெலிகடன் நகரில் நடைபெற்ற பொதுநலவாயப் பாராளுமன்றச் சங்கத்தின் மகாநாட்டில் கலந்து கொண்டு நாடு திரும்பிய வவுனியா எம். பி. திரு. தா. சிவசிதம்பரத்தையும் உலகப்பாராளுமன்ற ஒன்றியத்தின் நிர்வாகசபை உறுப்பினராக தெரிவு செய்யப்பட்ட சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினத்தையும் கௌரவிக்குமுகமாக வரவேற்பளிப்பதென வவுனியா நகரசபை தீர்மானித்துள்ளது. (வெ)

பிஸ்கால் விற்பனை

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றம்

கனகரத்தினம் கைம்பெண் புவனேஸ்வரி,
ஏழாலை மேற்கு

வழக்காளி

வழக்கு இலக்கம்: எல 549

எதிர்

கனகரத்தினம் சர்வேஸ்வரன்,
கோண்டாவில் மேற்கு

எதிராளி

மேற்சொல்லப்பட்ட எதிராளியிடமிருந்து வெளியாதலில் விதிக்கப்பட்ட தொகைப்பணம் ரூபா 2500/-ம் இன்னும் 10-10-78 தொடக்கம் முழுத்தொகையையும் கொடுக்கும் வரை வருடமொன்றுக்கு 100க்கு 5% வட்டியும், பிஸ்கால் செலவும், பவுண்டேச்சன் ஈடுவாக்குவதற்காக கீழே விபரிக்கப்படும் ஆதனத்தின் சகல உரித்துக்களையும் 1980-ம் ஆண்டு தை மாதம் 17-ந் திகதி (17-1-80) காலை 10-00 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்கப்படும் என இத்தால் அறிவிக்கிறேன்

ஆதன இடாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திரிக் யாழ்ப்பாணப் பகுதி நல்லூர் கோவிற்பற்று கோண்டாவில் இறை ''அரசடி'' நிலப்பரப்பு 5 இதில் கிழக்குப் பக்கமாய் நிலப்பரப்பு 2 1/2 இந்த நிலப்பரப்பு இரண்டரைக்கும் (2 1/2) எல்லை கிழக்கு பொன்னுச்சாமி திரவியத்திற்குரிய ஆதனம், வடக்கு மாணிக்கவாசகர் பெண் யோகம்மாவிற்குரிய ஆதனம், மேற்கு இதன் மிகுதி ஆதனம் தெற்கு சந்திரசேகரம் பெண் இன்னம்மாவின் ஆதனம் இதடங்கலும்

கா. மகேந்திரராசா,
பிஸ்கால்,
மாவட்ட நீதிமன்றம்,
யாழ்ப்பாணம்.

மாவட்ட நீதிமன்றம்,
யாழ்ப்பாணம்.
26-12-79. 4493

'ஈழநாடு'இந்திய தேர்தல் போட்டி

(1) தனிக்கட்சி அரசு / கூட்டரசாங்கம்? :..............................

(2) ஆட்சி அமைக்கும் அரசு பெறும் மொத்த ஸ்தானங்கள்? ....

(3) தமிழ்நாட்டில் எக்கட்சி கூடுதல் ஸ்தானங்கள் பெறும்?......................

(4) புதிய பிரதமர் யார்?......................

பெயர்:..

விலாசம்:..

....

....

....
கையொப்பம் திகதி:

கூப்பனை அனுப்ப வேண்டிய முகவரி:
தேர்தல் போட்டி ''ஈழநாடு'', த. பெ. எண்: 49,
யாழ்ப்பாணம்.

'கருப்பட்டி'த் தொழிலின்

நெருக்கடியும் : ஆலோசனைகளும்

யாழ்ப்பாணத்தின் இயற்கை வளமான 'பனை' பற்றித் தான் தற்பொழுது பேச்சு அடிபடுகின்றது. தென்னையும் பனையும் இலங்கையில் வாழும் சிங்கள, தமிழ் மக்களின் இரு பிரதான வளங்களாகும். அண்மையில் பனம்பொருள் அபிவிருத்திச் சங்கம் விசேடமான அளவில் கருத்தரங்கு ஒன்றையும் கண்காட்சி ஒன்றையும் நடாத்தியது வாசகர்கள் அறிந்ததே.

கடந்த அரசாங்க காலத்தில் பனையிலிருந்து பெறப்பட்ட பதநீரின் மூலப்பொருளாகப் பயன்படுத்தி பரீட்சார்த்தமாக பனங்கட்டி உற்பத்தியை மேற்கொண்டனர். அம்முயற்சியினால் சிறு சிறு தொழிற்சாலைகள் கட்டப்பட்டதுடன் பலருக்கு வேலைவாய்ப்பும் ஏற்பட்டது. அது பேராசையாலும் - பாரமாகவும் செய்யப்பட்டு வந்த பனங்கட்டி உற்பத்தியானது சீனி இறக்குமதிப்பின்னர் தடை செய்யப்பட்டது. இது மிகவும் வருந்தத்தக்க சரியான முறைக்கு ஏதோவொரு வகையில் ஈடு செய்யத்தக்கதாக அதையும் பனங்கட்டி உற்பத்தியின் மகத்துவம் முறையாக உணரப்பட்டமையினாலேயே இந்த முந்திய நடவடிக்கையை மேற்கொண்டதாக காரணமென்று கூறலாம். பனங்கட்டித் தொழிலில் ஈடுபட்டுள்ள அரச நடவடிக்கைகள் மேலும் விஸ்தரிக்கப்படவேண்டும்.

கம் பெறவேண்டும்.

அணி திரண்டு நின்று வெறுமனே பேச்சினால் மட்டும் அபிவிருத்தியை ஏற்படுத்துவது என்பது சற்றுச் சிரமமாகும். ஆனால் நமது சொத்துச் சொத்தாகவும் ஆயிரம் காலத்துப் பயிராகவும் விளங்கும் பனை பற்றிய கருத்து வளர்ச்சி ஆய்வுகளாக இன்னும் கூர்மையடைய வேண்டும். வெறும் கலைப்பினாலும் கட்டமைப்பினாலும் ஏதோ சில வேளைத்திருப்திப்படுத்தும் குறுகிய நோக்குடன் எமது பெருவளமான பனைவளத்தை அணுகுவதும் ஆராதிப்பதும் நிறுத்தப்படவேண்டும்.

தென்கிழக்காசிய நாடுகளில் மக்கள் வதியும் வதிவிடங்களுக்கு மிகவும் பயன்தரும் மரமாக விளங்குவது பனையே. பிறநாடுகளில் உள்ள பனை இனங்களினுடைய வகைகளைக் கண்டறிந்து மதிப்பீடுகளையும் அவற்றிலிருந்து பெறப்படும் இலாபகரமான பயன்பாடுகளைப்பற்றியும் நன்கு நுணுகி அறிவது மிகவும் பிரதான நடவடிக்கையாக அமையலாம்.

புதிய எழுச்சிமிகு பொருளாதார வளர்ச்சிக்கு அடிகோலும் பனைபற்றிய பொருளாதாரச் சிந்தனை வளரவும் வளம் பெறவும் வாழ்த்தும் அதேவேளையில் நமது பனையோடு தொடர்புடைய மக்களது வாழ்வும் வளம்பெற வகை செய்ய வேண்டுவதும் இன்றைய காலகட்டத்தில் அத்தியாவசிய தேவையாகும்.

சிந்தனை சீரியதாக அமைய வேண்டும், என்பதே எமது வேணவா.

—நவன்

மக்கள் கருத்து

பனங்கட்டித் தொழில் மிகவும் நல்ல முறையில் ஈடுபட உரிய சூழ்நிலையை மிகவும் உருவாக்குதல் வேண்டும். பனங்கட்டியின் தேவையும் பொருளாதாரப் பின்னணியான சந்தைக் கூட்டுத்தாபன கூட்டுறவுச் சங்கங்களின் சிறு கைத்தொழிலின் மீதான அக்கறையும் பனங்கட்டித் தொழிலின் அபிவிருத்திக்கு கடந்த காலங்களில் மிகவும் உறுதுணையாக அமைந்தன.

அரசின் சமுதாயக்கொள்கையும் இப்பேற்பட்ட தொழில்களுக்கு அதிக மதிப்பான ஊட்டமாக அமையவேண்டும். சமூக அந்தஸ்தின் நிலைமையை ஒரளவு கௌரவமாகவும், அரசின் நிர்வாகத்துறைத் தொடர்புகளுடன் ஒருங்கிணைந்து மனப்போக்கினை ஏற்படுத்தி வளர்த்துக்கொள்ளவும் பனங்கட்டி உற்பத்தி உதவுவதாக இருக்கின்றது.

வடபிரதேசத்தின் தொன்மைச் சீர் பண்பாட்டுப் பொருள்களுள் ஒன்றாகப் பனங்கட்டியையும் கொள்ளலாம். அதன் மருத்துவ ரீதியான ஆய்வும் பயன்பாடும் எம்மவர்க்கு மிகவும் நல்ல முறையில் பயன் தருவனவாயுள்ளன. இந்திய சிறு கைத்தொழில் வளர்ச்சி நிலைமைகளையும் அபிவிருத்தித் தன்மைகளையும் நாம் எடுத்தேற்ற முறையில் கைக்கொள்ள முனைந்திருப்பது ஒருவகையில் இன்னும் பொருளாதார அபிவிருத்திப் போக்கினையே சுட்டி நிற்கின்றது.

பனை பற்றிய எண்ணக்கரு எமது மக்கள் மத்தியில் இன்னும் நிலப்பிரபுத்துவ மரபின் எச்சசொச்ச சிந்தனையில் ஊறிய படிமப்போக்குத் தன்மை கொண்டதாகவே விளங்குகின்றது. சுருக்கமாகச் சொன்னால் பனையிலிருந்து எமது மக்களே பெறும் அனைத்து நன்மைகளையும், நாம் சுதந்திர மனதோடும் பனை அபிவிருத்தியோடும் கணிப்பதற்கு எம்மைப் பெருமளவில் நாம் வளர்த்துக்கொள்ளவில்லை. எனவே அடிப்படையில் எமது மூலாதாரமான வளங்களைக் கொண்டும் பனை பற்றிய தெளிவான கண்ணோட்டம் தல

“யாழ். மாவட்ட விவசாயிகள்

உரத்தை அளவோடு பாவிக்க வேண்டும்!

பருத்தித்துறை எம். பி. யோசனை

(புலோலி)

“அரசாங்கம் தற்போது விவசாயிகளுக்கு வழங்கிவரும் விவசாயக் கடன் தொகையை அதிகரிப்பதுடன், விவசாயிகளுக்கான நுகர்வுக் கடனையும் வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டும். அப்போது தான் அரசின் விவசாயத் திட்டங்கள் வெற்றிபெறுவதுடன் எமது நாட்டின் பொருளாதார வளமும் சிறப்படைய முடியும்”

இவ்வாறு பருத்தித்துறைத் தொகுதி கைநெசவுச்சேவை நிலையமும், இலங்கை வங்கியும் இணைந்து நடாத்திய கமக்காரர் தினவிழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய பருத்தித்துறை எம் பி திரு கே. துரைரத்தினம் கூறினார்.

பருத்தித்துறை நீதவான் திரு கே. ஞானச்சந்திரன் தலைமையில் யாழ் கமநலச் சேவைத் திணைக்கள உதவி ஆணையாளர் திரு கே பரமசிவம் மங்கள விளக்கேற்ற, கற்கோவளம் பயிர்ச்செய்கை உத்தியோகத்தர் திரு சிவசுப்பிரமணியத்தின் வரவேற்புரையுடன் ஆரம்பமான இக் கமக்காரர் தின விழாவில் தொடர்ந்து உரையாற்றிய எம் பி துரைரத்தினம் குறிப்பிட்டதாவது!

யாழ் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் எதிர்காலத்தில் விவசாயம் செய்ய முடியாத நிலை தோன்றியுள்ளது. எமது பகுதி விவசாயிகளின் உற்பத்திச் செலவு வெகுவாகப் பாதித்துவருகிறது இப் பகுதிகளில் ஒரு பட்டியில் ஒரு அந்தர் விளைச்சலைப் பெற்றாலும் போதிய லாபத்தைப் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளது ஆனால் தென்னிலங்கைப் பகுதியில் ஒரு ஏக்கரில் ஒரு அந்தரை மட்டுமே விளைச்சலைப் பெற்றாலும் கூட அப்பகுதி விவசாயிகளுக்கு நஷ்டமேற்படுமென்று கூறமுடியாது அவர்களுக்கு நீர்ப்பாசனம் உட்பட சகல வசதிகளும் உண்டு

“யாழ் மாவட்ட விவசாயிகள் அமோனியம் சல்பேற்று உரத்தை அளவுக்கு மிஞ்சிப் பாவித்துவருவதால் நீரும் உவர்த்தன்மையுடையதாகிவிடும். அத்துடன் தற்போது நீரில் 29 சதவீதம் நச்சுத்தன்மை செறிந்திருப்பதாகவும் இது 45 சதவீதமாக மாற்றமடையுமாயின் குருதிச்சோகை நோய் ஏற்படும் அபாயம் தோன்றும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. எனவே விவசாயிகள் உரத்தைப் பாவிப்பதை அளவோடு பாவிக்கவேண்டும். கிணற்றில் இருந்து நீர் இறைப்பதையும் போதியளவு கட்டுப்படுத்த வேண்டும்.

பருத்தித்துறை நகரசபைப் பகுதியில் குழாய்நீர் விநியோகம் செய்வதற்கான திட்டமொன்று வெளிநாட்டின் உதவியுடன் மேற்கொள்ளப்படவுள்ளது மணற்காட்டில் இருந்து பருத்தித்துறை நகரப் பகுதிக்கு நீர் வழங்கும் இத்திட்டம் அடுத்தவருடத்தில் மேற்கொள்ளப்படும்

எமது பொருளாதாரத்தை நாமே பாதுகாக்கவேண்டும். வருங்கால சந்ததியினரை உணவு உற்பத்தி, கால்நடை வளர்ப்பு ஆகிய நடவடிக்கைகளில் ஈடுபடுத்துவதை ஊக்குவிக்கவேண்டும். விவசாயம், கால்நடை வளர்ப்பு கைத்தொழில் ஆகியவற்றில் நாம் கூடிய கவனமெடுப்பதன் மூலமே எமது பொருளாதாரத்தைப் பெருக்கமுடியும்” என்றார்

பருத்தித்துறை நீதவான் திரு கே ஞானச்சந்திரன் தலைமையுரையில் குறிப்பிட்டதாவது!

எதிர்காலத்தில் எமது நாட்டில் சிறந்த பொருளாதார அமைப்பை மேற்கொள்வதற்கு பின்வருவன அவசியம். கால்நடை வளர்ப்பு கைத்தொழில் ஆகியவற்றில் சுயநிலையில் நின்றே ஈடுபாடு கொள்ளச்செய்யவேண்டியது பெற்றோரின் கடமையாகும்.

எமது பகுதியில் பெரும்பாலும் மட்டிலே பசுவதை செய்யப்பட்டுவருவதைத் தடைசெய்வதற்கு நடவடிக்கைகள் உடனடியாக மேற்கொள்ளப்படவேண்டும் இது ஒரு மனிதாபிமானமற்ற செயலாகும் என்பதை எல்லோரும் கருத்திற்கொள்ள வேண்டும்” என்றார்.

பெரும்பாக உத்தியோகத்தர் திரு கனகலிங்கம், தேசியசேமிப்பு வங்கி பிரச்சார உத்தியோகத்தர் திரு. ஆர் சந்திரராசா, தேசியசேமிப்பு வங்கி பிரச்சார உத்தியோகத்தர் திரு ஆர் சற்குணராசா, கால்நடை அபிவிருத்தி பிரச்சார உத்தியோகத்தர் திரு கணேசசுந்தரம், வடமராட்சிப்பகுதி கால்நடை வைத்திய அதிகாரி திரு பி இராமநாதன், திரு கே கணபதிப்பிள்ளை ஜே பி உட்பட இன்னும் பலர் உரையாற்றினர்.

இவ் விழாவின் போது நடாத்தப்பட்ட போட்டிகளுக்கான பரிசில்களை திருமதி இந்திராணி துரைரத்தினம் வழங்கினார் கலைநிகழ்ச்சிகளும் இடம்பெற்றன

மன்னார் மாவட்டத்தில் நோயாளர்படும் அவஸ்தை

கடுமையானநோயாளர்கள்,பெரிதும் பாதிப்பு

(நமது மன்னார் நிருபர்)

மன்னார் மாவட்டத்திற்கு ஒரேயொரு அம்புலன்ஸ்வண்டி மட்டுமே சேவையிலீடுபடுத்தப்பட்டுள்ளது இந்த அம்புலன்ஸ் வண்டி மன்னார் ஆஸ்பத்திரியில் இருக்கிறது.

தலைமன்னார், பேசாலை, விடத்தல்தீவு, அடம்பன், முருங்கன், சிலாவத்துறை போன்ற ஆஸ்பத்திரிகளுக்கு அம்புலன்ஸ் வண்டி இல்லாது. இந்த ஆஸ்பத்திரிகளிலிருந்து மன்னார் ஆஸ்பத்திரிக்கு நோயாளிகளைக் கொண்டுசெல்லவேண்டுமானால் மன்னார் ஆஸ்பத்திரிக்கு டெலிபோன்செய்து அம்புலன்ஸ் வண்டியை வரவழைத்து நோயாளியை மன்னார் ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்லவேண்டும். இச்சமயம் மன்னார் ஆஸ்பத்திரியில் அம்புலன்ஸ் வண்டி இல்லாது விட்டால் அதிகபணம்செலுத்தி தனியார் வாகனங்களை வாடகைக்கமர்த்தி நோயாளியை மன்னார் ஆஸ்பத்திரிக்குக் கொண்டுசெல்லவேண்டும் இதனால் தலைமன்னார், பேசாலை, விடத்தல்தீவு, அடம்பன், முருங்கன், சிலாவத்துறை போன்ற பகுதிகளிலுள்ளவர்கள் மிகவும் பாதிப்படைந்து வருகிறார்கள்.

அண்மையில் மன்னார் ஆஸ்பத்திரியிலுள்ள ஒரேயொரு அம்புலன்ஸ் வண்டியும் திருத்த வேலைகளுக்காக கொழும்புக்கு அனுப்பப்பட்டது. இதனால் கடும்நோயாளர்களை மன்னார் ஆஸ்பத்திரியில் இருந்து அனுராதபுரம் ஆஸ்பத்திரிக்கு கொண்டுசெல்வதிலும் கஷ்டம் ஏற்பட்டுள்ளது. மன்னாரிலிருந்து அனுராதபுரம் ஆஸ்பத்திரிக்கு டெலிபோன்செய்து அனுராதபுரத்திலிருந்து அம்புலன்ஸ் வண்டி வந்ததான் நோயாளியை அனுராதபுரம் ஆஸ்பத்திரிக்கு கொண்டுசெல்லவேண்டும் இதனால் கடும்நோயாளி அனுராதபுரம் ஆஸ்பத்திரிக்குப் போவதற்கு 8 மணித்தியாலம் காவல் இருக்கவேண்டும். எட்டுமணி நேரம் தனதுநோயின் வேதனையோடு காவல்இருக்கவேண்டும்.

மன்னாரிலிருந்து [illegible] நோயாளியொருவரை ஏற்றிக் கொண்டு அனுராதபுரம் செல்லும் அம்புலன்ஸ்வண்டி இடையில் நிறுத்தப்பட்டு சாரதியும் மற்றும் ஊழியர்களும் தேநீர் அருந்தச்செல்வார்கள். இவர்கள் தேநீர் அருந்தக் கிட்டத்தட்ட ஒருமணிநேரம் செல்கிறது இந்த ஒருமணிநேரமும் நோயாளி அம்புலன்ஸ்வண்டிக்குள் வேதனைப்பட அம்புலன்ஸ் சாரதியும் மற்ற ஊழியர்களும் கவலையில்லாமல் தேநீர் அருந்துவார்கள் இப்படிப்பட்ட அவலநிலை நீங்குமா என மன்னார் மாவட்டமக்கள் ஏங்கி இருக்கிறார்கள்.

சுயவீடமைப்புத் திட்டம்:

பண்டிதர் அடிக்கல் நாட்டுவார்

(யாழ்ப்பாணம்)

இன்று காலையிலும் பிற்பகலிலும் மூன்று அடிக்கல் நாட்டுவைபவங்களில் ஊர்காவற்றுறை எம் பி பண்டிதர் கா. பொ. இரத்தினம் கலந்து கொள்கின்றார்

இன்று காலை, கரம்பன் மெலிஞ்சிமுனையிலும், நாரந்தனை தம்பாட்டியிலும், பிற்பகல் வேலணை திட்டியிலும் சுய உதவித்திட்டத்தின் கீழ் வீடுகள் கட்டப்படுவதற்கான வீடுகளுக்கு ஊர்காவற்றுறை எம். பி., பண்டிதர் கா பொ. இரத்தினம் அடிக்கல் நாட்டுவார்.

இன்று மாலை 4 மணிக்கு, வீடமைப்புத் திணைக்கள உத்தியோகத்தர்களும் ஊர்காவற்றுறை எம். பி யும், மாதிரிக் கிராமத்துக்காக தெரிவு செய்யப்பட்ட சரவணை கிழக்கு கிராமத்தைப் பார்வையிடுவார்கள்.

கரோல் நிகழ்ச்சி

(கருப்பிட்டி)

நத்தார் தினத்தை முன்னிட்டு கரவைக் கத்தோலிக்க மக்களால் கிறிஸ்மஸ் கரோல் நிகழ்ச்சி நெல்லியடி பஸ் நிலையத்தில் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இக் கரோல் நிகழ்ச்சியில் கிறிஸ்மஸ் தாத்தா சிறுவர்களுக்கு பரிசில்களை வழங்கினார்

சிறப்பான நத்தார்

(மன்னார்)

மன்னார் பகுதியில் நத்தார் பண்டிகை சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. பேசாலையில் மிகவும் சிறப்பாக நத்தார் பண்டிகை கொண்டாடப்பட்டது

லயனல் வவனியா விஜயம்

(வவனியா)

கல்வி சேவைகள் அமைச்சர் திரு. லயனல் ஜயதிலக இன்று மாலை உத்தியோகபூர்வவிஜய மொன்றை மேற்கொண்டு வவனியாவிற்கு வருகின்றார்.

இலவசபாடப்புத்தக விநியோகம் சம்பந்தமாக அமைச்சர் இன்று மாலை உத்தியோகபூர்வவிஜயமொன்றை மேற்கொண்டு வவனியாவிற்கு வருகின்றார்.

இலவசப்பாடப்புத்தக விநியோக சம்பந்தமாக அமைச்சர் இன்று மாலை வவனியா தமிழ்மகாவித்தியாலயத்தில் மாநாடு ஒன்றையும் நடாத்தவுள்ளார். மாநாட்டில் கலந்து கொள்ளுமாறு வவனியாமாவட்ட சகல பாடசாலைகளின் அதிபர்களுக்கும் கல்வித்திணைக்களம் சுற்று நிருபம் ஒன்றின் மூலம் அறிவித்துள்ளது.

(வே)

'எமர்ஜன்ஸி'யை அன்று ஆதரித்த அ.தி.மு.க.

இந்திராவை இன்று எதிர்ப்பதன் மர்மம் என்ன?

கூட்டணிக்கும் கூட்டாட்சிக்கும் வேறுபாடு தெரியாதவருடன் விவாதிப்பது எப்படி?

கலைஞர் கருணாநிதி கேட்கிறார்

(சென்னை)

"'அவசரகால நிலையின்போது தன்னையும் அறியாமல் ஏற்பட்ட அநீதிகளுக்கு பகிரங்கமாக வருத்தம் தெரிவித்துக்கொண்ட இந்திரா அம்மையார் அவசரகாலநிலை இனி வரவேவராது என்றும் அறிவித்துவிட்டார். ஆனால் அவசரகாலநிலை பிரகடனத்தை அப்போது ஆதரித்த அ தி மு.கவினர் இப்போது எதிர்ப்பதுதான் வேடிக்கையாக இருக்கிறது

அரசு என்றால் என்ன? கூட்டாட்சிவேறு கூட்டணி ஆட்சி வேறு என்ற வேறுபாட்டைக்கூட அறியாதவர்களாக அ.தி.மு.கவினர்இருப்பது வேதனைக்குரியதுதான்.''

இவ்வாறு தி மு க தலைவரும், தமிழக சட்டசபையில் எதிர்க் கட்சித் தலைவருமான டாக்டர் மு கருணாநிதி வானொலியில் நிகழ்த்திய தேர்தல் பிரசார உரையில் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

'மக்கள் குரலே மகேசன் குரல் என்ற தத்துவத்தின் அடிப்படையில் நாமெல்லாம் [illegible] தவிவுகளை திரவும் மக்களின் உரிமைக்குரல் ஒலிக்கும் பாசறையாக திராவிட முன்னேற்றக் கழகத்தை நிறுவிய பேரறிஞர் அண்ணாவை நினைவில் நிறுத்தி அவரது கொள்கைகளை செயல்படுத்தி வருகிறோம். இதுவரை நாங்கள் எடுத்துக் கொண்ட நடவடிக்கைகளை நாங்கள் ஆளும் கட்சியாக இருந்தபோதும் எதிர்க்கட்சியாக இப்போது விளங்குகின்ற போதும் நீங்கள் நன்கு அறிவீர்கள். தொடர்ந்து உங்கள்

இன்பமான [illegible] பார்த்து நிற்கிறார்.

காந்தியின் நினைவிடத்தை களங்கப்படுத்தினர்

''இரண்டரை ஆண்டுகளுக்கு முன்பு நான் ஜனதாக் கட்சிக்கு பெரும் ஆதரவு வழங்கி அந்தக் கட்சி மத்தியில் ஆட்சி அமைத்திட துணையாகவிருந்தோம். எந்தக் காந்தியினுடைய நினைவிடத்தில் நின்று ஒற்றுமையாக இருந்து நாட்டுக்கு உழைத்திட சபதமெடுத்தார்களோ அதே காந்தியடிகள் நினைவிடத்தில் இரு கூறாகப் பிரிந்து நின்று கலகம் செய்து காந்தியடிகளின் நினைவிடமே மறைக்கக்கூடிய அளவுக்குக் களங்கம் ஏற்படுத்திவிட்டார்கள். ஜனநாயகத்தைக் காப்பார்கள் என்று நாம் நினைத்திருந்த ஜனதாக் கட்சியினர் ஜனநாயகத்துக்கு பைத்தியம் பிடிக்கின்ற ஒரு நிலையை அல்லவா உருவாக்கி விட்டார்கள்.

ஜெயப்பிரகாஷ்நாராயண் கண்ட கனவு அவர் உயிருடன் இருக்கும்போதே அவர் மனம் நொந்திடும் அளவுக்கு கலைந்து குலைந்து போகு[illegible] செய்துவிட்டவர்கள் மீண்டும் ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருக்கின்றனர் என்பது இந்தியாவை எங்கே கொண்டுபோய் விடுமோ தெரியவில்லை.

''இரண்டரை ஆண்டுகள் நாம் கண்டது நான் பிரதமர் நான் தலைவர் என்ற நிலையையே. இந்த நிலையால் பண்டித நேரு அவர்கள் உருவாக்கிய நவீன இந்தியா பின்னோக்கித் தள்ளப் பட்டு விட்டது.

''இந்த நிலையை உருவாக்கி விட்ட ஜனதாவுடன் இன்று கூட்டுச் சேர்ந்துள்ள தமிழக ஆளும் கட்சியான அ தி.மு.க. சர்வாதிகாரத்தை எதிர்ப்போம் என்று உரக்குரலிடுகிறார்கள் சர்வாதிகாரசக்திகள் இப்போ எங்கே இருக்கின்றன. எமர்ஜன்ஸி தீர்மானத்தை நாடாளுமன்றத்தில் ஆதரித்தும் முன்மொழிந்தும் பேசியவர்கள் இப்போது எங்கே இருக்கிறார்கள்,

எமர்ஜன்சி'யை அன்று ஆதரித்தனர்

''எமர்ஜன்ஸி இனிமேல் வரவே வராது என்றும் அப்போது தன்னையும் அறியாமல் ஏற்பட்ட அநீதிகளுக்கு பகிரங்கமாக மன்னிப்புக்கேட்டுக் கொண்டும் கடந்த செப்டெம்பர் மாதம் சென்னையில் நடைபெற்ற அண்ணா பிறந்த நாள் விழாவில் இந்திரா அம்மையார் பேசியதை நாட்டு மக்கள் மறந்துவிடவில்லை. எமர்ஜன்ஸி இருந்தபோது இந்திரா அம்மையாரை ஆதரித்தவர்கள் இப்போது எமர்ஜன்ஸி இல்லாத போது இனிமேல் வரவேவராது என்கின்றபோது எதிர்ப்பது தான் வேடிக்கையாக இருக்கின்றது.

''மத்தியில் நிலையான ஆட்சி அமைந்திடவேண்டும் மாநிலத்தில் நேர்மையான ஆட்சி ஏற்படவேண்டும் என்று பிறரைக் குறைகூறியே ஆட்சிக்கு வந்தவர்கள் எவ்வளவு ஆயிரக்கணக்கான ஏன்கோடிக்கணக்கான ஊழல்களுக்கு ஆளாகி இருக்கிறார்கள் என்பதை மக்கள் நேரடியாகக் கண்டு வருகின்றனர்.

பல்கேரிய கப்பல்பேரம்

''எதிர்க்கட்சியான நாம் அவர் சொன்னார் இவர் சொன்னார் என்றில்லாமல் இதோ ஏராளமான ஆதாரங்கள் என்று எடுத்துத் தந்து சட்டசபையிலேயே ஆட்சியாளர் மீது குற்றஞ்சாட்டி பல்கேரியா கப்பல் பேர ஊழல்களுக்கு சுப்ரீம் கோர்ட் நீதிபதிகளைக் கொண்டு விசாரணை நடத்துவதாக முதலமைச்சரே உறுதி அளித்து இன்று நாற்பது நாட்களையும் தாண்டிவிட்ட நிலைமையே இன்று காண்கிறோம். ஆனால் நாட்கள் நாற்பது ஆகியும் நீதிபதியைக் காணவில்லை.

''வாங்காத கப்பலுக்கு ஊழல் குற்றச்சாட்டா? விசாரணையா? என்று கேட்டார்கள். ஒரு பெண்ணின் கற்பைச் சூறையாட இல முரடர்கள் முயற்சி செய்கின்றபோது அவளது நாயகன் திடீரென வந்து அவர்களை அடித்து கையைக் காலை முறித்துவிடுகின்றபோது முரடர்கள் ஏன்யா நாங்கள் தான் அந்தப் பெண்ணின் கற்பைச் சூறையாடவில்லையே ஏன் என் காலை முறித்தாய் என்று கேட்பது போன்றிருக்கிறது, வாங்காத கப்பலுக்கு இல்லை விசாரணை என்று கேட்பது.

மாணவர் தேர்வில் முறைகேடு!

'மருத்துவக் கல்லூரி மாணவர் தேர்வில் நடைபெற்ற முறைகேடுகள் பற்றி நாம் சட்டமன்றத்தில் கூறியபோது மறுத்தார்கள். ஆனால் உயர்நீதிமன்றம் தந்த தீர்ப்பு என்ன? அரசாங்கம் புதிய ஆணை பிறப்பித்து புதிய மாணவர்களைச் சேர்த்தது செல்லாததென்று தீர்ப்பு வெளியாகிறது.

மூன்றுமுறை அதிசய உயர்நீதிமன்றம் ஒரு [illegible] கண்டனம் தெரிவித்[illegible] [illegible] முதல்வர் திரு நீலம் சஞ்சீவரெட்டி. ஆனால் இங்கே ? கேள்வியுடனே நிறுத்துகிறேன் நீங்களே விடையைக் கண்டுபிடியுங்கள்!

அ. தி. மு.கவுக்கு கொள்கையில்லை

'நிர்வாக[illegible] தான் இவ்வளவு சீர்கேடு. நிலையான தெளிவான அரசியல் கொள்கையேதும் உண்டா? எல்லாக் கட்சிகளும் கொண்ட தேசிய அரசு மத்தியில் அமையவேண்டும் என்கிறது அ. தி. மு. க. தேர்தல் அறிக்கை. யுத்தகாலங்களில் தானே அத்தகைய தேசிய அரசு அமையமுடியுமென்றால் இல்லை கூட்டாட்சி என்று மறுதான் விளக்கமளித்திருக்கிறார்கள். கூட்டாட்சி வேறு கூட்டணி வேறு. இந்த வேறுபாட்டைக்கூட அவர்களால் புரிந்துகொள்ளமுடியவில்லை. மத்தியில் எல்லாக் கட்சியும் சேர்ந்த மந்திரிசபை வேண்டுமென்கின்றவர்கள் தமிழ்நாட்டில் உங்கள் தோழமைக் கட்சிகளை கூட்டுச்சேர்த்துக் கொள்ளக் கூடாதா' என்று கேட்டேன் ஒரு கட்சி பெரும்பான்மை பலம் இருக்கும் இவ்வாறு அமைக்கத் தேவையில்லை என்று விட்டார் எம். ஜி. ஆர்.

அண்ணா கூறவில்லை என்கிறார்களே ..

மாநிலங்களில் சுயாட்சி, மத்தியில் கூட்டாட்சி என்பது அண்ணாவின் கொள்கை என்று இப்போது அறிவித்திருக்கிறார்கள் ஆனால் 1974ம் ஆண்டு இதையே தி. மு. க. தமிழ்நாடு சட்டசபையில் தீர்மானம் நிறைவேற்றியபோது எதிர்த்தவர்கள் அ தி மு க என்பதை மக்கள் மறந்துவிடமாட்டார்கள். அதுமட்டுமா? மாநில சுயாட்சி என்ற வார்த்தையே அண்ணா கூறவில்லை என்றார்கள். மாநிலசுயாட்சி என்றாலும் இந்தி ஆதிக்கத்தை எதிர்ப்பதென்றாலும் தி மு க உறுதியாகவே இருக்கும்.

''1976ம் ஆண்டு எமர்ஜன்ஸி காலத்தில் நாடாளுமன்றத்தில் அ தி மு க தலைவர் [illegible] இந்திக்காக இருக்கிறேன் இந்தியை ஆதரிக்கிறேன் என்று [illegible] தமிழ்நாட்டில் [illegible]

[5-ம் பக்கம் பார்க்க]

வல்மெலிக்ஸ்

Ipecac Compound Syrup
THE FAMILY COUGH SYRUP
Valmelix®
110 ml
The safe herbal remedy

வல்மெலிக்ஸ்
பாரம்பரிய மூலிகை மருந்து
ஆடாதோடை எமது முன்னோர்களால்
தொண்டை அரிப்பையும், இருமலையும்
குணமாக்கப் பயன்படுத்தப்பட்டது.

ஆடாதோடை வேரினை, சுத்தமாக்கி செறிவாக்கி
அடிப்படையாகக்கொண்ட
ஒரு நவீன இருமல் பாணி வல்மெலிக்ஸ்.
வல்மெலிக்ஸ் இருமல் லொசெஞ்ஜெஸ்சும்
கிடைக்கும். சுகாதாரமாக ஈயக்கடதாசியில்
வசதியாக வருகிறது.
வல்மெலிக்ஸ் லொசெஞ்ஜெஸ் தொண்டைக் கரகரப்பையும், தொல்லை தரும் இருமலையும்
குணமாக்க, உரியது.

விற்பனையாளர்கள்
ஜே. எல். மொறிசன் சன் அன்ட்
ஜோன்ஸ் (சிலோன்) லிமிட்டெட்.,
த. பெ. இல 430, கொழும்பு

ரூபா 6/30

GARADS

ஒரு லொசெஞ்ஜெர் 15 சதம்.

அது
பழையதும்
புதியதும்

உணவு முத்திரை

வழங்குவதில் தில்லுமுல்லு?

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் உணவு முத்திரை வழங்குவதில் பல தில்லு முல்லுகளும், மோசடிகளும் நடந்து வருவதால் ஏழை மக்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஆயிரக்கணக்கில் சம்பாதிப்பவர்கள் உணவுமுத்திரை பெற்றிருப்பதாகவும் முந்நூறு ரூபா வருமானம் இல்லாத பலருக்கு உணவுமுத்திரைகள் வழங்கப்படவில்லை என்றும் இதனால் ஏழைமக்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் கூறப்படுகிறது.

யாழ்ப்பாண மாவட்டத்திலேதான் உணவுமுத்திரை விநியோகத்தில் அதிக மோசடி நடைபெற்று வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உணவு முத்திரை பெறுவதற்குத் தகுதியுடைய பலருக்கு இதுவரை உணவுமுத்திரை கிடைக்கவில்லையாம்.

உயர் அதிகாரிகள் இனியேனும் இவ்விடயத்தில் கவனம் செலுத்தி, பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடியாக உணவுமுத்திரைகிடைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்று பாதிக்கப்பட்ட மக்கள் அங்கலாய்க்கின்றனர். (கொ)

'எமர்ஜன்ஸியை..

(4ம் பக்கத் தொடர்ச்சி)

நிதிமான் ஹிந்திப்பிரச்சினையை கிளப்புகிறார் என்பதும் குறிப்பிடத்தக்க [illegible] இன்று இருக்கிறது.

"இரண்டரை ஆண்டு ஆட்சிக்காலத்தில் மத்திய அரசுச்சரி, மாநிலஅரசுச்சரி எத்தனையோ திட்டங்களை வகுத்தன. ஆனால் அவையெல்லாம் காற்றோடு கலந்துவிட்டன. வீட்டுக்குவீடு காய்கறித்தோட்டம் போடும் திட்டமொன்றைத் தமிழகத்தில் கொண்டுவந்தார்கள். அது என்ன ஆயிற்று

"எமது முஸ்லிம் இந்திரா காங்கிரஸ், முஸ்லீம்லீக் ஆகியகட்சிகளுடன் கூட்டுச்சேர்ந்து வேட்பாளர்களை நிறுத்தியுள்ளது. எமது முற்போக்குக் கூட்டணி திருமதி இந்திராவின் தலைமையே இந்தியாவுக்குச் சிறந்தது என்று கூறுகிறது

தேர்தல் அறிக்கையில் குளறுபடி

"ஜனதா தலைவர் ஜெகஜீவன்ராமைப் பிரதமராக்க உறுதியளித்திருப்பதாக [illegible] அறிக்கை கூறுகிறது. ஆனால் இந்திரா ஆட்சியைத் [illegible] ஸ்தாபிப்போம் என்கிறது. அந்தோ பரிதாபம் அந்தக்கட்சிகளுடன் கூட்டுச்சேர்ந்துள்ள மக்கள் [illegible] மிக பரிதாபம்.

அடுப்பிலிருந்த செப்புச்சட்டியை சூடாகஇருக்கும்போது இறக்கிவைத்துவிட்டு ஆறிய பின்னர் கையால் தொடுவார்கள். ஆனால் உடைந்த கண்ணாடியை வீட்டுக்குள் வைத்திருக்காமல் தூக்கிஎறிந்துவிடுவார்கள். இந்திரா காங்கிரஸ் எமர்ஜன்ஸி இருந்தபோது சூடாக இருந்தது இப்போது சூடாக இல்லை அதனைப் பயன்படுத்த முயல்கிறோம். ஆனால் ஜனதாவோ உடைந்தகண்ணாடி [illegible] தூக்கி எறிய வேண்டும்.

செல்லாக்காசு..

"செல்லாக்காசு என்றும் கள்ளநாணயம் என்றும் எந்தத்தலைவர்கள்மீது தி.மு.க வினர் குறைகூறினார்களோ அந்தத்தலைவர்களுடன் இன்று கூட்டுச்சேர்ந்துள்ளோர் நமது அணியைப்பற்றி குறைகூற என்ன தகுதியுடையவர்கள். நடந்தவைகள் நடந்தவைகளாகவே இருக்கட்டும், நடப்பவைகள் நல்லவைகளாகவே இருக்கட்டும் என்ற இலட்சிய உறவைக் கட்டிக்காப்போம். உத்தமர் காந்தியடிகள், பண்டித ஜவஹர்லால்நேரு, ஜெயப்பிரகாஷ் போன்றோர் பிறந்த இந்தப்பூமியில் ஜனநாயகத்தைக் கேலிக்கூத்தாக்காமல் உழைக்கும்மக்களுக்கு உதவுவோம். விஞ்ஞானபூர்வமான பொருளாதார அபிவிருத்திக்கும் மொழி, கலை, கலாச்சாரம் இன மானம் ஆகியவற்றைப் பாதுகாப்போம். விஞ்ஞான வழியில் தொடர்ந்துசெல்வோம். தி மு க வீட்டுக்கு விளக்கு நாட்டுக்குத் தொண்டன்! மறவாதீர்கள்" (கு)

கல்விச்சேவைகள் அமைச்சர் விஜயம்

(உடுப்பிட்டி)

கல்விச் சேவைகள் அமைச்சர் திரு லயனல் ஜயதிலக இம் மாதம் 31-ம் திகதி யாழ் நகருக்கு விஜயம் செய்யவுள்ளார்.

அமைச்சர் அன்று காலை 9-00 மணிக்கு யாழ் இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறும் இலவச பாடவிநியோகம் பற்றிய கூட்டத்தில் சிறப்புரை ஆற்றுவார்.

பிரஸ்தாபகூட்டத்தில் சகல பாடசாலை அதிபர்களையும் கலந்துகொள்ளுமாறு வடமாநில கல்வி அதிபதி திரு ஓ. மாணிக்கவாசகர் அறிவித்துள்ளார்.

பார்சல்கள் ஏற்க மறுப்பு

(மன்னார்)

தலைமன்னார் பியர் புகையிரத நிலையத்தில் உள்ள பார்சல்கள் நிறுக்கும் தராசு பழுதடைந்துள்ளதால் பார்சல்களை ஏற்க முடியாதென புகையிரத நிலைய அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். இதனால் வெளியிடங்களுக்குப் பார்சல்கள் அனுப்பமுடியாமல் இருக்கிறது.

சுவீப் முடிவுகள்

(கொழும்பு)

கொழும்பு தேசிய லொத்தர் சபையின் அதிர்ஷ்டம் பார்க்கப்பட்ட 75-வது தேசிய லொத்தர் சீட்டிழுப்பின் முடிவுகள் வருமாறு:

முதலாம் பரிசு
03 G 0259
ரூபா 1,00,000

இரண்டாம் பரிசு
25 K 0961
ரூபா 40,000

மூன்றாம் பரிசு
12 S 0511
ரூபா 10,000

தலா ரூபா 1,522/50 கொண்ட 100 ஆறுதல் பரிசுகள் விபரம் வருமாறு:

07 A 0042
21 A 0544
02 B 0126
28 B 0147
10 C 0669
04 D 0249
09 D 0418
26 D 0399
05 E 0218
26 E 0724
12 F 0713
24 F 0315
29 F 0470
14 G 0342
29 G 0189
07 H 0566
01 J 0433
64 J 847
24 J 0558
30 J 0258
24 K 0713
07 L 0298
21 L 0902
27 L 0280
06 M 0840
21 M 0779
16 N 0027
05 O 0105
15 O 0218
25 O 0812
14 P 0767
24 P 0611
30 Q 0986
15 R 0378
24 R 0866
21 S 0583
04 T 9652
13 T 0717
28 T 0874
02 V 0235
23 V 0 66
06 W 0866
08 W 0662
05 X 0494
22 X 0318

18 A 0884
31 A 0338
21 B 0345
07 C 0047
03 D 0094
04 D 0492
14 D 0965
26 D 0908
06 E 0016
04 F 0929
20 F 0778
29 F 0339
07 G 0551
20 G 0993
04 H 0721
22 H 0060
02 J 0063
12 J 0388
26 J 0111
09 K 0416
31 K 0831
10 L 0533
24 L 0334
03 M 0184
16 M 0875
12 N 0500
21 N 0052
11 O 0288
17 O 0448
30 O 0105
22 P 0773
10 Q 0854
15 R 0065
21 R 0842
06 S 0598
28 S 0526
11 T 0518
22 T 0692
21 U 0117
17 V 08 4
24 V 0504
08 W 0272
29 W 0863
14 X 0940
22 X 0803

25 X 0972

26 X 0690
29 X 0251
03 Y 0107
20 Z 0333

27 X 0157
01 Y 0352
17 Y 0958
26 Z 0248

26 Z 0557

(இவை யாவும் உறுதிப்படுத்தப்பட வேண்டும்)

தரமுயரும்

(புளியங்குளம்)

நாமிகுளம் கனிஷ்ட வித்தியாலயம் மகா வித்தியாலயமாக விரைவில் தரமுயர்த்தப்படவுள்ளது.

இப்பாடசாலையில் க.பொ.த உயர்தர வகுப்புக்களையும் அடுத்த ஆண்டு முதல் நடாத்துவதற்கு பாடசாலை அதிபர் திரு ஏ சண்முகரத்தினம் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றார்.

கடற்படைக்குப் பதில் ராணுவம்

(மன்னார்)

தலைமன்னார் துறைமுகத்துக் கருகாமையில் இருந்து வந்த கடற்படைத்தளம் அகற்றப்பட்டுள்ளது. கடற்படையினர் இருந்த இடத்தில் இப்போது ராணுவத்தினர் இருக்கின்றனர்.

சிவபூசை மாநாடு

30-ல் நடைபெறுகிறது

(மன்னார்)

திருவாசக விழாவில் விடத்தல்தீவைச் சேர்ந்த புலவர் ஜனாப் எம் பி எம் முகம்மது ஹாசிம் ஆலிம் என்ற முஸ்லிம் பிரமுகர், திருவாசக மகிமைபற்றி உரையாற்றினார்.

திருவாசக விழாவும் சிவபூசை மாநாடும் ஈழத்து சிவனடியார் திருக்கூட்டத்தால் திருக்கேதீஸ்வர திருவாசக மடத்தில் நடைபெற்றுவருகிறது.

விழா நாட்களில் திருவீதி பாவை, கூட்டுவழிபாடு திருவாசகபாராயணம், புராண படனம் முதலியன நடைபெறும். 30ம் திகதி சிவபூசை மாநாடு நடைபெறும். மாநாட்டுக்கு சிவாகமஞான சாகரம் சிவஸ்ரீ நா சோமஸ்கந்தக் குருக்கள் தலைமைவகிப்பார்.

திருவாசகவிழாவை புலவர் திருநாவுக்கரசு ஆரம்பித்து வைத்தார். மாதோட்ட உதவி அரசாங்க அதிபர் திரு எஸ் குமாரசாமி தொடக்கஉரை நிகழ்த்தினார். மன்னார் அரசாங்க அதிபர் திரு [illegible] பேர்னாண்டோ தலைமையுரை நிகழ்த்தினார். திரு க. இ. குலரத்தினம், செந்தமிழ்ச் செல்வி பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி ஆகியோர் சிறப்புரை நிகழ்த்தினார்கள்.

ஜனவரி இரண்டாம் திகதி நடைபெறும் ஆருத்திரா தரிசனத்துடன் விழா முடிவடையும்.

ஒரே நேரத்தில் இரண்டு!

(மன்னார்)

மடியில் கஞ்சா வைத்துக் கொண்டு ஒரு பிரயாணியிடம் 'பிக்பொக்கெற்' அடித்தவர் என மக்களால் நையப்புடைக்கப்பட்டு பொலிஸில் ஒப்படைக்கப்பட்டார். இச்சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது: மன்னார் பஸ் நிலையத்தில் காத்திருந்த பிரயாணியிடம் 350 ரூபாவை 'பிக்பொக்கெற்' அடித்த நபரை பொதுமக்கள் பிடித்து பொலிசாரிடம் ஒப்படைத்தனர். இவரை விசாரணை செய்த மன்னார் பொலிசார் இவரிடம் மடியில் இருந்த 52 கிராம் கஞ்சாவையும் கைப்பற்றினர்.

சந்தேகநபர் மன்னார் நீதவான் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டபோது சந்தேக நபரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்ட மன்னார் நீதவான் கேஸ் விசாரணையை ஒத்திவைத்தார்.

வான்டுவஸ்ட் மறைவு

(கொழும்பு)

முன்னாள் உதவி பொலிஸ் அத்தியட்சகர் திரு வான்டு வஸ்ட் இம்மாதம் 25-ம் திகதி காலமானார். இவருக்கு வயது 64 ஆகும். (வே)

கூட்டுப்பிரார்த்தனை

(தொல்புரம்)

தொல்புரம் சத்தியசாயிசமூக நிலையத்தின் ஆதரவில் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் தொல்புரம் மத்தி கொட்டடிப் பதிவாழ் ஸ்ரீ ஆதிமுத்துமாரி அம்பாள் ஆலயத்தில் பஜனை, கூட்டுப்பிரார்த்தனை நடைபெற்றுவருகிறது.

இந்திய லோகசபை
இடைக்காலத் தேர்தல்
எப்படி இருக்கும்?

★

"ஈழநாடு' நடத்தும் தேர்தல் போட்டியை யொட்டி உங்கள் யூகத்துக்கு ஓரளவு தெளிவான விளக்கம் தரும்

தேர்தல் கண்ணோட்டம்

நாளைய

"ஈழநாடு" இதழில் வருகிறது.

இப்பொழுது

போத்தலிற் கிடைக்கிறது

லங்கெம் மரப்பாதுகாப்பிகள் (வூட் பிறிசவேற்றிவ்ஸ்) இப்பொழுது மலிவாகவும், வசதியாகவும் கைக்கடக்கமான 625 மி. லி. போத்தல்களில் கிடைக்கின்றன.

மரம் உக்குதல், கறையான் பங்கசுத் தாக்கங்களுக்குள்ளாகுதல் ஆகியன பெரும் இடையூறாக இருக்கும் அயன மண்டலத்திற்கென்றே லங்கெம் மரப்பாதுகாப்பிகள் விசேஷமாகச் செய்யப்பட்டவை.

வூட் பிறிசவேற்றிவ் 'A', மைபூசப்பட அல்லது பொலிஷ் பூசப்படவுள்ள தளபாடங்களுக்குரியது. கறைப்படுத்தாதது.

வூட் பிறிசவேற்றிவ் 'B' வலைகளுக்கும், கூரைக்குப் போடும் மரங்கள், வேலிக் கம்பங்கள் முதலியவற்றுக்கும் உகந்தது.

உங்கள் மரங்களை பூரணமாகப் பாதுகாக்க லங்கெம் மரப் பாதுகாப்பிகளை நம்புங்கள்

LANKEM

லங்கெம் சிலோன் லிட்.,
760, பேஸ்லைன் ரோட்டு,
கொழும்பு 9,

LANKEM
Wood Preservative
'B'
(Black Staining)

Grant K & E 1035

ஆப்கானிஸ்தானில் சோவியத் துருப்புக்கள்:

அமெரிக்கா கண்டனம்!

150 விமானங்கள் இறக்கப்பட்டன

வாஷிங்டன், டிச 27

ஈரானில் பணயம்வைக்கப்பட்டுள்ள அமெரிக்கர்களின் பிரச்னை நெருக்கடியான கட்டத்தை அடையும் இவ்வேளையில் சோவியத் யூனியன் தனது துருப்புக்களை ஆப்கானிஸ்தானில் குவித்து வருகிறது.

சோவியத் யூனியன் தனது ஏராளமான துருப்புக்களையும் பெருந்தொகையான ஆயுதங்களையும் ஆப்கானிஸ்தானுக்கு விநியோகித்துள்ளதாக அமெரிக்க வெளிநாட்டுத் திணைக்களம் அறிவித்துள்ளது.

48 மணித்தியாலங்களில் 150 சோவியத் விமானங்கள் ஆப்கானிஸ்தான் விமான நிலையத்தில் இறக்கப்பட்டன என்று தெரிவித்த வெளிநாட்டுத் திணைக்களம் சோவியத் யூனியனின் இந்த நடவடிக்கையை சர்வதேச நாடுகள் கண்டிக்கவேண்டும் என்றுகேட்டுள்ளது.

ஆப்கானிஸ்தானின் எல்லைக்கு வடக்கேயுள்ள சோவியத் யூனியனின் எல்லைப்புறத்திலும் ஏராளமான துருப்புகள் நிலைகொண்டுள்ளன. (கு)

பிரிட்டனில் பூமி அதிர்ச்சி

லண்டன், டிச 27

இங்கிலாந்தின் வடமேற்கு பகுதியிலும், ஸ்கொட்லாந்திலும் நேற்று ஏற்பட்ட பூமி அதிர்ச்சியினால் நூற்றுக்கணக்கான மக்கள் வெளியேறியுள்ளனர்.

கடந்த ஐந்து ஆண்டில் பிரிட்டனில் ஏற்பட்ட மிகப்பெரிய பூகம்பம் இதுவாகும் என்று அறிவிக்கப்பட்டுள்ள போதிலும் எவ்வுயிர்ச் சேதமும் ஏற்படவில்லை என்று பொலிசார் தெரிவித்துள்ளனர் (கு)

பொருளாதார நெருக்கடி ஆயுதப்போட்டியாக மாறும்

அயத்தொல்லா கொமெய்னி எச்சரிக்கை

தெஹ்ரான், டிச. 27

அமெரிக்க - ஈரான் பொருளாதார நெருக்கடி ஆயுதப்போட்டியாக மாறலாம் என்று ஈரானியமதத்தலைவர் அயத்தொல்லா கொமெய்னி கூறியுள்ளார்.

நேற்று வானொலியில் நாட்டு மக்களுக்கு விடுத்த செய்தியிலேயே கொமெய்னி மேற்கண்டவாறு எச்சரிக்கையை விடுத்தார்.

ஈரானுக்கு எதிராக சர்வதேச பொருளாதாரத் தடை பற்றி ஐ நா. பாதுகாப்புசபை உறுப்பினர்களுடன் அமெரிக்க தூதுவர் ஆலோசித்து வருவதைச் சுட்டிக்காட்டியே கொமெய்னி மேற்கண்டவாறு எச்சரிக்கையை விடுத்தார்.

நாட்டு மக்களுக்கு விடுத்த வேண்டுகோளில் ஈரான் வெளிநாடுகளில் தங்கியிருப்பதைத் தவிர்த்துக்கொள்ளும்வகையில் சகலமக்களும் விவசாயத்துறையில் ஈடுபட வேண்டுமென்றும் அயத்தொல்லா கொமெய்னி வேண்டுகோள்விடுத்தார். (கு)

நித்திரையிலிருந்தபோது

நோயாளியின் தங்கச் சங்கிலி அபேஸ்!

[மன்னார்]

பேசாலை ஆஸ்பத்திரி வார்ட்டில் அனுமதிக்கப்பட்டிருந்த ஒருபெண் நோயாளியின் கழுத்தில் இருந்த தங்கச்சங்கிலி திருடர்களால் களவாடப்பட்டதாம்.

வார்ட்டில் அனுமதிக்கப்பட்டிருந்த பெண் நோயாளி தனது கழுத்தில் 8750 ரூபா பெறுமதியான தங்கச் சங்கிலி அணிந்திருந்தாராம். நித்திரை கொண்டுவிட்டு காலையில் எழுந்து பார்த்தபோது சங்கிலியையும், டோர்ச் லைற்றையும் காணவில்லையாம்.

பேசாலை ஆஸ்பத்திரி வைத்தியரிடம் முறைப்பட்டு பொலிசாருக்கு அறிவிக்கப்பட்டது. மன்னார் பொலிசார் புலன் விசாரணை செய்துவருகின்றனர் இந்த ஆஸ்பத்திரிக்கு காவலாளிகிடையாது நோயாளர்களை எந்நேரமும் உத்தரவின்றிப் பார்க்கலாம், இந்த ஆஸ்பத்திரிக்குப் போவதற்கு பல பாதைகள் உண்டு இவை திருட்டுக்கு உதவியாய் உள்ளன என வைத்தியர் தெரிவித்தார்.

பிரதேச அலுவலகம்

(மன்னார்)

மன்னாருக்கு விஜயஞ்செய்த நெற்சந்தைப்படுத்தும் சபைத் தலைவர் திரு மாரப்பன, உபதலைவர் ஜனாப் எம். ஈ. எச். முகம்மதலி ஆகியோர் நெற்சந்தைப்படுத்தும் சபையின் பிரதேச அலுவலகத்தை மன்னாரில் திறந்து வைத்தனர். திறப்புவிழாவில் மன்னார் எம். பி. திரு பி. எஸ். சூசைதாசன். மன்னார் அரசாங்க அதிபர் திரு. கமிலஸ்பெர்னாண்டோ உட்பட பலர் உரையாற்றினர்.

ஜெகஜீவன்ராம் திடீர் சுகவீனம்

[பம்பாய்]

ஜனதாக் கட்சியின் தலைவர் திரு. ஜெகஜீவன்ராம் நேற்று இரவு திடீரென சுகவீனமுற்றதால் இங்குள்ள மருத்துவமனையொன்றில் அனுமதிக்கப்பட்டார்.

இங்கு தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் உரையாற்றுவதற்காக வந்தபோதே அவர் திடீரென சுகவீனமுற்றார்.

71வயதான திரு ஜெகஜீவன்ராம் சாந்தாக்குரூஸ் விமான நிலையத்தில் வந்திறங்கியதும் கட்சி ஆதரவாளர்களால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த கூட்டமொன்றில் உரையாற்றிவிட்டு 'தானி' என்னும் இடத்திற்குப் புறப்பட்டுச் செல்கையிலேயே சுகவீனமுற்றார் என்றும் அவர் எவ்வித நோயினால் பீடிக்கப்பட்டார் என்பது தெரியவில்லை என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது [ரூ]

சூறாவளியால் பாதிக்கப்பட்ட

ஆனைப்பந்தி ஆலயத்துக்கு ரூ 16 500 வழங்கப்பட்டது

[மட்டக்களப்பு]

சூறாவளியால் பாதிக்கப்பட்ட ஆலயங்களைத் திருத்தி அமைப்பதற்காக அரசாங்கத்தினால் நிதி வழங்கப்படும் வேலைகள் மட்டக்களப்பு பகுதியில் ஆரம்பமாகியுள்ளன

மட்டக்களப்பு ஆனைப்பந்தி பிள்ளையார் ஆலய திருத்த வேலைகளுக்காக 16 ஆயிரத்து 500 ரூபாவுக்கான காசோலையை பிராந்திய அபிவிருத்தி அமைச்சரும் மட்டு நகர் முதல்வருமான திரு செல்லையா இராசதுரை ஆலய பரிபாலன சபையினரிடம் ஒப்படைத்தார் ஆலய பரிபாலன சபையின் சார்பில் திரு சீ. சண்முகராஜா பெற்றுக்கொண்டார். இவ் வைபவத்திற்கு வருகைதந்த அமைச்சரையும், மட்டுநகர் மாவட்ட அமைச்சர் திரு எம். [illegible]யும் ஆலய குரு ஸ்ரீ பிரமஸ்ரீ வரதராஜ குருக்கள் [illegible] கொடுத்து வரவேற்றார். இவ்வைபவத்தில் மண்முனை வடக்கு உதவி அரசாங்க அதிபர் திரு சாம்பசிவ ஐயர், ஆலய பரிபாலன சபை உறுப்பினர்கள், பொதுமக்கள் கலந்துகொண்டனர்.

விவசாய அதிகாரசபை

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்தில் அடுத்தமாதம் முதல் ஐந்து விவசாய அதிகாரசபைகள் செயற்படவிருக்கின்றன. இச் சபைகளே [illegible] சம்பந்தமான ஆகிய பகுதிகளில் ஏற்படுத்தப்படும். [ஈ]

றொக்குத்தயன்

500ஈ.சி

பயிர்களை அழிக்கும்

பீடைகளைக் கட்டுப்படுத்தும்



பயிர்களின் இலை தளிர்களை உண்ணும் பீடைகளை அழிக்க றொக்குத்தயன் மிகவும் சிறந்தது. நெல், கோவா, உருளைக்கிழங்கு, அன்னுசி, மிளகாய், புகையிலை மற்றும் பயிர்களையும் தாக்கும் வெட்டுப்புழு, அழுக்கணவன் போன்ற பீடைகளையும் கட்டுப்படுத்தும். நம்பிக்கையான வியாபாரிகளிடமே கிடைக்கும்.

தரமான

BAYER

பாயர் பீடைநாசினிகளைப் பாவியுங்கள்.

இலங்கையில் பாயர் பீடைநாசினிகளைத் தயாரிப்போர் :

ஹேக்கெம் லிமிட்டெட்

400, டீன்ஸ் வீதி, கொழும்பு 10.
தொலைபேசி : 93563, 96331-6

melADS

2வது திகிலூட்டும் வாரம்
REGAL (Jaffna) Daily at 2-00, 4-30, 7-00 & 9-30 p. m.
GENE HACKMAN
in
French Connection ii (Color)
குறிப்பு: உங்கள் இதயம் பலவீனமானதா? ஏனெனில் இப்படத்தைப் பார்க்கும் சிலர் மயக்கம் அடைகிறார்கள்.

100-வது வெற்றித்திருநாளை நோக்கி ஓடுகிறது!
மனோஹரா A யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-சுஜாதா, சந்திரமோகன், கவிதா,
நடித்த
அந்தமான் காதலி
(வண்ணப்படம்)

100-வது வெற்றித் திருநாள் நோக்கி
ஸ்ரீதர் (யாழ். நகர்) தினசரி காலை 10-30, பி.ப 2-30, 6-15, 9-45
சிவாஜிகணேசன் - சுஜாதா
நடித்த
தீபம்
(வெள்ளிவிழாச் சித்திரம்)
(வர்ணக்கலர்)

1980- ஜனவரி 1-ம் திகதி புத்தாண்டன்று வெற்றி முழக்கமிடும் 75வது நிறைவு தினத்தைக் கொண்டாடுகிறது
மக்கள் கலைஞர் ஜேம்ஸ்பொண்ட் ஜெய்சங்கரின் 150-வது புரட்சிப்படைப்பு...
சாந்தி யாழ்நகர். போன்: 7642. தினசரி 10-30, 2-30, 6-30, 9-45.
டாக்ஸி ட்ரைவர்
கண்ணைக் கவரும் உன்னத வண்ணச் சித்திரம்

வெலிங்டன் (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள் சனி-ஞாயிறு 4 காட்சிகள்
நல்லநேரம்
லிடோ (யாழ். நகர்) தினசரி 10-30, 2-30, 4-30, 7-00 9-30 போன்: 7698
SUPER COPS
(More Suited For Adults)

வின்ஸர் யாழ்ப்பாணம் தினசரி 10-30, பி.ப.2-30 6-00, 9-30
சிவாஜி - ஜெயலலிதா
ஜி. வரலட்சுமி
நடித்த
(புத்தம் புதிய பிரதி)
தாய்

ராஜா யாழ்ப்பாணம் தினசரி 4 காட்சிகள்



நடிப்புக்கு ஈடுஇணை யாருமில்லை என சவால்விட்டு நடிக்கும் சிவாஜி அதற்கு ஈடு கொடுக்கும் கே. ஆர். விஜயா
சிவாஜி - கே. ஆர். விஜயா
மனோரமா
தேங்காய் சீனிவாசன்
நடிக்கும்
ஜெனரல் சக்கரவர்த்தி
(ஈஸ்ட்மன் கலர்) டைரக்ஷன்: யோகானந்
குடும்பத்துடன் பார்க்கவேண்டிய படம்

இன்றைய பலன்

மார்கழி மாதம் 13ம் திகதி வெள்ளிக்கிழமை (28-12-1979)

மேடம்: அபிப்பிராயபேதந் தோன்றும் விஷயத்துக்கு தூளாகுவீர்கள் கடமையில் கவனம் செலுத்தவும்.

இடபம்: எழுத்தாளர்களுக்கு எழுச்சிமிக்கதினம். குடும்ப வாழ்க்கையிலும் முன்னேற்றமுண்டு. கடமையும் சிறக்கும்.

மிதுனம்: சகோதரத்தின் உடல்நிலையும் பாதிக்கப்படக் கூடும் எதற்கெடுத்தாலும் சீறிப்பாய்வீர்கள். போட்டி விவகாரங்களில் இறங்காது பொறுமையுடன் இருக்கவும்.

கடகம்: நீண்டநாள் பிணி நிவர்த்தியாவதற்கு இடமுண்டு வாகன சிறப்புமுண்டு. வாதிலும் உயர்ச்சியுண்டு. ஆதரவு பெருகும்.

சிங்கம்: சமூகத்தில் அந்தஸ்து உயருவதற்கிடமுண்டு புத்திரர் வழியாலும் நன்மையுண்டு இருதொழில்புரிவதற்கு இடமுண்டு

கன்னி: எந்தச் சந்தர்ப்பத்திலும் விழிப்புணர்ச்சியுடன் இருக்கவும். தொழில்துறையிலும் ஸ்தம்பிதநிலை காணப்படும் சத்துருக்களாலும் மனக்கவலை அதிகரிக்கும்.

துலாம்: கண்ணியமான காரியங்களை முடிப்பதில் வெற்றி காண்பீர்கள் [illegible] இடம்பெறும் தொழிலும் சிறப்புறும்.

விருச்சிகம்: உடல்தொல்லைகளால் பாதிக்கப்படுவீர்கள் எதிர்பாராத விபத்து இடம்பெறலாம் போக்குவரத்து விடயத்தில் கவனம் செலுத்தவும்.

தனுசு: இன்ப மகிழ்ச்சியுண்டு வாழ்வும் வளம்பெறும் பிதாவழிச் செய்தி கிட்டும். பத்திரமொன்றும் கைச் சாத்திடப்படலாம்.

மகரம்: வணிகத்துறையில் சாதகமான சந்தர்ப்பம் கிடைக்கும் நீர்த்தொழில் புரிவோர் சிறப்படைவர் எதிர்பாராத சுபசகுனமும் இடம்பெறும்.

கும்பம்: மெச்சத்தகுந்த நடவடிக்கையின் மூலம் உச்சமாக மதித்தவர்களை அடிபணியவைப்பீர்கள்.

மீனம்: அதிக செலவுகளால் பாதிக்கப்படுவீர்கள் பொருள்விரயமும் ஏற்படும் குடும்பப்பிரச்சினையும் தலைதூக்கும். பொறுமை நன்று.

சோதிடக் கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
மர்மயோகி

நாகம்ஸ் (சுன்னாகம்)
தினசரி 6-45, 10-00
சனி, ஞாயிறு 2-45
எம் ஜி ஆர்—ஜெயலலிதா
தனிப்பிறவி
(புதிய பிரதி)

"தமிழகத்தைப் போல ஈழத்திலும் நடிப்புக் கல்லூரி வேண்டும்!"

'இராசு'வுக்கு கலைஞர் மன்றம் கோரிக்கை

(மட்டக்களப்பு)

வறுமையில்வாடும் கலைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று மட்டுநகர் கலைஞர் மன்றம், பிராந்திய அபிவிருத்தி அமைச்சர் திரு செல்லையா இராசதுரைக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது.

கலைஞர் மன்றம் அமைச்சரிடம் சமர்ப்பித்துள்ள மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

ஃ ஈழத்தில், தமிழ்க்கலைஞர்கள் பசி வறுமையில் வாடுகின்றனர். காரணம் இவர்களில் பலர் வேலையின்றித் தவிக்கின்றனர்; இத்தகைய கலைஞர்களுக்கு வேலைவாய்ப்பை அரசு, தனியார், கூட்டுத்தாபன சபைகளில் பெற்றுக் கொடுக்கவேண்டும்.

ஃ "தமிழகத்தில் சினிமா நடிப்புக்கல்லூரி அமைக்கப்பட்டிருப்பதுபோல், இலங்கையிலும் ஒன்று அமைக்கப்படவேண்டும்.

ஃ "தமிழகத்திலிருந்து தமிழ் திரைப்படங்கள் இறக்குமதி செய்யும்போது மூன்றுபிரதிகள் இறக்குமதிசெய்யப்பட்டு கொழும்பில் இரண்டும், யாழ்ப்பாணத்தில் ஒன்றும் திரையிடப்படுகின்றது. இத்தொகை நான்காக அதிகரிக்கப்பட்டு கொழும்பு, யாழ்ப்பாணத்தில் திரையிடப்படும் அதே தினத்தில் மட்டக்களப்பிலும் திரையிட ஆவனசெய்யப்படவேண்டும்.

ஃ "மட்டக்களப்பு, திருகோணமலை போன்ற இடங்களில் கலை விழாக்கள் நடத்த இடவசதி இல்லை. மாவட்டந்தோறும் சகலவசதிகளையுங்கொண்ட கலை அரங்குகள் அமைக்கப்படவேண்டும்.

ஃ "மட்டக்களப்பு பகுதியில் புகழ்பெற்ற நாட்டுக்கூத்துக்களை செய்திப்படமெடுத்து பல நாடுகளிலும் திரையிட ஏற்பாடுசெய்யவேண்டும்''

அப்புலிங்கம் மறைவுக்கு அனுதாபம்

(மாவிட்டபுரம்)

நாதசுர வாத்தியத்துறையில் 'வல்லவனாக' இசையுலகில் தனித்தோர் இடத்தைப் பெற்றுவிளங்கிய [illegible] அப்புலிங்கம்பிள்ளையின் மறைவு பேரிடி என இலங்கை இசைவேளாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

மேற்படி சங்கம் வெளியிட்டுள்ள அனுதாபச்செய்தியில் தெரிவித்துள்ளதாவது:

"ஈழத்தில் தலைசிறந்த நாதசுர மேதையாகத் திகழ்ந்து, நாதசுர சம்பிரதாயங்களை அனுசரித்தும், ரசிகர்களின் விருப்பங்களை நிறைவேற்றியும் தனியிடத்தைப் பெற்று விளங்கிய திரு அப்புலிங்கம்பிள்ளை, ஈழத்திலிருந்து சென்று முதன்முதலாக இந்தியத் திருச்சி வானொலியில் நாதசுரக் கச்சேரி நிகழ்த்தியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. இலங்கை-இந்திய பிரபலமாகத் திகழ்ந்த அவர் தனது இறுதிக்காலம் வரை நாதசுரத்தை வாசித்து அதை இறைப்பணிக்காக அர்ப்பணித்து வந்தார்.

"அவரது மறைவையிட்டு ஈழத்து இசைவேளாளர்கள் பெரிதும் கவலையடைந்துள்ளதுடன் அவர் பாணியில் வாசிக்கக்கூடிய நாதசுரக் கலைஞர்கள் உருவாகவேண்டும் என்று இலங்கை இசைவேளாளர் சங்கம் வேண்டுகிறது''

RIO Jaffna Phone
Daily 4 Shows
CRAZY BOYS ARE BACK in
Hong Kong With Love

சைக்கிள் திருட்டு

(மாவிட்டபுரம்)

சீமெந்துத் தொழிற்சாலையில் களவுபோன சைக்கிள் ஒன்றின் உதிரிப்பாகங்களில் ஒருபகுதி, பொலிசாரால் மீட்கப்பட்டதுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலையில் வேலை பார்க்கும் தெல்லிப்பழையைச் சேர்ந்த நாகேந்திரம் அருளைரத்தினம் என்பவர் சீமெந்துத் தொழிற்சாலையில் தமது சைக்கிளை நிறுத்திவிட்டு கடமையில் ஈடுபட்டிருந்தபோது சைக்கிள் திருட்டுப் போய்விடவே அவர் காங்கேசன்துறைப் பொலிஸில் புகார்செய்தார். இதுகுறித்து விசாரணையில் ஈடுபட்ட பொலிசார், கி. பாலசிங்கம் என்பவரைக் கைதுசெய்ததுடன் சைக்கிளின் சில உதிரிப்பாகங்களையும் கைப்பற்றியுள்ளனர் தொடர்ந்து விசாரணை இடம்பெற்றுவருகிறது

பஸ்சாரதியை தாக்கினார்களாம் இருவருக்கு றிமாண்ட்

(மாவிட்டபுரம்)

மதுபோதை தலைக்கேறிய நிலையில் இ.போ.ச சாரதி மீது தமது கைவரிசையைக் காட்டியதாகக் கூறப்படும் மூவரில், இருவர் கைதுசெய்யப்பட்டு றிமாண்டில் வைக்கப்பட்டுள்ளதுடன், ஒருவர் தலைமறைவாகியுள்ளார்.

பலாலி வீதிவழியாக பஸ்ஸைச் சாரதி ஓட்டிவந்தபோது மூன்று நபர்கள் அவருக்கு மீதியமதுபோதையில் கலாட்டா பண்ணியதாகவும், அவர்கள் சாரதியைத் தாக்கியதாகவும் கூறப்படுகிறது

இதுகுறித்து காங்கேசன்துறைப் பொலிஸில் புகார் செய்யப்பட்டதையடுத்து விசாரணையில் ஈடுபட்ட பொலிசார் இ. மணியம், எஸ். பாலன் ஆகிய இருவரைக் கைதுசெய்து மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்தபோது அவர்கள் றிமாண்டில் வைக்கப்பட்டனர் மேலுமொரு சந்தேக நபரைப் பொலிசார் தேடிவருகின்றனர்.

வீடமைப்புத் திட்டம்

(வண்ணார்பண்ணை)

யாழ்ப்பாணம் நாவாந்துறை கடற்கரை ஓரமாக வீடமைப்புத் திட்டம் ஒன்றை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது

இதற்காக இருபது ஏக்கர் நிலம் கடலிலிருந்து நிரவி மீட்கப்படவுள்ளது

நாவாந்துறை கடற்கரை ஓரமாகக் கடலை நிரவி இத்திட்டத்திற்கு இருபது ஏக்கர் நிலத்தை கொடுப்பதற்கு அரச தாழ்வுப்பிரதேச நிலமீட்சிச்சபை ஏற்பாடுசெய்துள்ளது

RANEE - Jaffna
Daily 5 Shows at 10-30 a. m; 2-15, 4-45, 7-15 & 9-45 p.m.
Peter Fonda Susan George
In
Dirty Mary Crazy Larry
(Color)

இரவில் நடமாடியவர்களிடம் திருட்டுப் பொருட்கள்

பொலிஸாரிடம் மூவர் சிக்கினர்

(யாழ்ப்பாணம்)

சுமார் 10 ஆயிரம் ரூபா பெறுமதியான 7 மலத்தியன் கிருமிநாசினிப் பெட்டிகளை கொண்டுசென்றதாக 3 பேரை பொலிசார் கைதுசெய்தனர். சந்தேகத்தின் பேரில் இவர்களைக் கைதுசெய்து விசாரணைக்குட்படுத்திய போது அவர்களிடமிருந்த மேற்படி பொருட்கள் யாவும் சம்பவ தினமிரவே திருடப்பட்டவை என்பது தெரியவந்ததாம்.

இச்சம்பவம் சாவகச்சேரியில் நடைபெற்றது.

சில தினங்களுக்குமுன் இரவு நேரத்தில் சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்தைச்சேர்ந்த உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் செனிவரத்தின தலைமையில் ஜீப்வண்டியில் ரோந்து சென்ற பொலிசார் நள்ளிரவு வேளையில் வீதியில் சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடியவர்களைக் கைது செய்து விசாரணைக்குட்படுத்திய போது இத்திருட்டு வெளியானது.

மிருசுவிலிலுள்ள மலேரியாத் தடுப்பு இலாகாவுக்குச் சொந்தமான பொருட்களையே இவர்கள் திருடியிருக்க வேண்டும் என்பது மேற்படி மலேரியாத் தடுப்பு இலாகாப் பொறுப்பதிகாரியான இளையதம்பி குருநாதன் என்பவர் சாவகச்சேரிப் பொலிஸில் செய்துள்ள முறைப்பாட்டின் மூலம் தெரியவந்துள்ளதாம்.

இத்திருட்டு சம்பந்தமாக யாழ். கனகரத்தினம் வீதியைச் சேர்ந்த குமாரசாமி சண்முகநாதன், யாழ். செட்டித்தெருவைச் சேர்ந்த சின்னத்தம்பி [illegible], யாழ். சோனகதெருவைச் சேர்ந்த சுலைமான் லெப்பை சீனிமுகம்மது ஆகியோர் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். (செ)

விவசாயிகளைப் பாதிக்காமல் வெங்காயம், மிளகாய் இறக்குமதி

(கொழும்பு)

வெங்காயம், மிளகாய் போன்ற பாவனைப்பொருட்கள் தட்டுப்பாடு இன்றி பாவனையாளர்களுக்குக் கிடைக்கும் வகையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன.

உள்ளூர் விவசாயிகளையும், பாவனையாளர்களையும் பாதிக்காதவகையில் கூட்டுறவு மொத்தவிற்பனவு ஸ்தாபனம் புதிய திட்டம் ஒன்றை செயல்படுத்தியிருக்கிறது.

செத்தல் மிளகாயும் சின்ன வெங்காயமும் உள்ளூரில் கிடைக்காத பட்சத்திலேயே வெளிநாட்டிலிருந்து இவை இறக்குமதி செய்யப்படும்.

மாதம் 18 ஆயிரம் தொன் செத்தல் மிளகாய் தேவைப்படபோதிலும் 8 ஆயிரம் தொன் மாத்திரமே உள்ளூரில் கிடைக்கிறதாம்.

உடற்பயிற்சி கலந்துரையாடல்

(புளியங்குளம்)

வவுனியா அரசாங்க அதிபர் திரு ஏ. முருகுப்பிள்ளையின் தலைமையில் வவுனியா சைவப்பிரகாச வித்தியாசாலை மண்டபத்தில் உடற்பயிற்சி தொடர்பான கலந்துரையாடல் நடைபெறவுள்ளது.

இத்தினை ஒழுங்குக்கு மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் திரு. எஸ் கரியதாஸ் மேற்கொண்டு வருகின்றார்.

வவுனியா மாவட்ட ரீதியாக நடைபெற்ற கரப்பந்தாட்ட, உதைபந்தாட்ட, உடற்பயிற்சி ஆகிய பயிற்சி வகுப்புகளில் பங்குபற்றிய வீரர்களுக்குரிய சான்றிதழ்களை அரசாங்க அதிபர் இன்று வழங்குவார்.

மீன் விற்பனை நிலையம்

(புளியங்குளம்)

[illegible], நெடுங்கேணி, ஒட்டிசுட்டான் ஆகிய பகுதி மக்கள் மீன்பிடிக்கூட்டுத்தாபனத்தின் நடமாடும் விற்பனை நிலையத்தின் மூலமாக மலிவான விலையில் மீனைப்பெற்றுக்கொள்ளக் கூடியதாகவுள்ளது. இவ்விற்பனை அண்மையில் ஆரம்பமாகியது.

மக்கினென் டிரவல் சேர்விஸ்
(இலங்கை) லிமிட்டெட்

உங்களை
திருச்சிராப்பள்ளி
மதுரை, பம்பாய்,
கோலாலம்பூர்,
சிங்கப்பூர், பரிஸ்,
லண்டன், துபாய்,
சவூதி அரேபியா,
கனடா
ஆகிய நாடுகளுக்கு
அழைத்துச்செல்ல

மற்றும்
பாஸ்போட்,
அமெரிக்கன்
டிறவலர்ஸ் செக்
உலகின்எப்பகுதிக்கும்
விமான டிக்கட்,
சுற்றுலாக்கள்
ஆகிய உங்கள்
தேவைகளை

கொழும்பு செல்லாமலே யாழ்ப்பாணத்தில்
ஒழுங்குசெய்துகொள்ள
இன்றே தொடர்புகொள்ளுங்கள்

மக்கினென் டிரவல் சேர்விஸ்
(இலங்கை) லிமிட்
தபால் பெட்டி இல: 92
8, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி: 8154

பணம் உங்களது! சௌகரியமாக்குவதுஎங்களது

பெருமாள்கோவில் வைகுண்ட ஏகாதசி

(யாழ்ப்பாணம்)

வண்ணை ஸ்ரீ வெங்கடேச வரதராசப்பெருமாள் கோவில் ஸ்ரீ வைகுண்ட ஏகாதசி மகோற்சவம் நாளை சனிக்கிழமை காலை நடைபெறும்.

காலை 5-45 சுவர்க்கவாயில் தரிசனம், தீபாராதனை, சுவாமி எழுந்தருளல், 6-30 சொற்பொழிவு ஸ்ரீலஸ்ரீ பரமாசாரியதேசிகசுவாமிகள் நல்லை ஆதீனம். இரவு 6 30 கூட்டுப்பிரார்த்தனை—தேவகானம் ஓதுவார் சு. தியாகராசா குழுவினர், 9-00 விரிவுரை "[illegible]" அருள்மொழி அரசி வித்வான் திருமதி வசந்தா வைத்தியநாதன், 10-30 ஆயர்பாடி ஸ்ரீ வேத மயில்வாகனம் சங்கீதகாலப்பிரசங்கம், 1-30 பக்திப்பாடல்கள் சங்கீதவித்வான் திரு எஸ் [illegible] ராஜா- பாக்கியநாதன் - மிருதங்கம் — திருமதி ஞானபதி [illegible] — வயலின் — திரு ஜேம்ஸ்—முகர்சிங்—சுப்புசாமி—கெஞ்சிரா, காலை 4-00 அபிஷேகம், 5-45 துவாதசி உற்சவம் (செ)

மூத்த விநாயகர் கோவிலில்

(யாழ்ப்பாணம்)

ஆனைக்கோட்டை மூத்தநயினார் ஆலயத்தில் சுவர்க்கவாசல் ஏகாதசி நாளை சனிக்கிழமை இரவு 7-30 மணி முதல் ஸ்ரீருக்குமணி சத்தியபாமா சமேத பார்த்தசாரதி பெருமானுக்கு விசேஷ அபிஷேகமும் சந்தனக்காப்பு அலங்காரமும் பூசைகளும் நடைபெறுவதுடன் அதிகாலை 3-30 மணிக்கு சுவர்க்கவாசல் பூசை நிறைவேறும்.

நல்லூர்த்தொகுதி வேட்பாளர்மீது வழக்கு

(யாழ்ப்பாணம்)

''1977ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 25ந் திகதி தனது தேர்தல் கணக்குகளை தேர்தல் ஆணையாளருக்கு சமர்ப்பிக்கவில்லை என்றும் ஏன் இலங்கை தேர்தல் சட்டத்தின்படி தண்டிக்கப்படக்கூடாது?'' என்று கடந்த தேர்தலில் நல்லூர்த்தொகுதியில் சுயேச்சையாகப் போட்டியிட்ட சட்டத்தரணி திரு. இராஜ இராஜேஸ்வரன் தம்பிராஜா மீது அட்டோர்னி ஜெனரல் வழக்கு தாக்கல்செய்துள்ளார்.

இவ்வழக்கு யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்தில், 1980 ஆண்டு ஜனவரி மாதம் 22ந்தேதி விசாரணைக்கெடுத்து கொள்ளப்படவுள்ளது. இவ்வழக்கில், தற்போது கிழக்கு மாகாண தேர்தல் ஆணையாளர் திரு ஜெயரட்ணம் உட்பட பல சாட்சிகள் ஆஜர் படுத்தப்படவுள்ளனர்.

மேற்படி குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டால் அவர் ஏழு வருடங்களுக்கு எந்தவித பாராளுமன்றத் தேர்தலிலும் போட்டியிட முடியாமல் சட்டம் தடைசெய்யும் என்பது குறிப்பிடத்தக்கது. (செ)

விவசாய அறிவுப் போட்டி

(வேலணை)

விவசாய இலாகாவும் இலங்கை வானொலியினரும் இணைந்து நடாத்திவரும் வானொலி விவசாய அறிவுப் போட்டியில் கலந்துகொள்வதற்காக தீவுப்பகுதியில் உள்ள பதிவுசெய்யப்பட்ட இளம் விவசாய கழகங்களுக்கிடையில் தெரிவுப்போட்டி இன்று 29ம் திகதி வெள்ளிக்கிழமை வேலணை சமநலச்சேவை நிலையத்தில் நடைபெறவிருக்கின்றது.

பனி மனிதனின் காலடிச் சுவடுகள்!

(புதுடில்லி டிசம்பர் 27)

இமயமலையில் இருப்பதாகக் கூறப்படும் பனி மனிதனின் காலடிச் சுவடுகளை பிரிட்டிஷ் மலையேறும் கோஷ்டி ஒன்று படம்பிடித்துக் கொண்டுவந்திருக்கிறது. இந்தப் படம் அண்மையில் பிரிட்டிஷ் டெலிவிஷனில் காட்டப்பட்டது.

எட்டடி நீளமும் 4 அடி அகலமும் கொண்டதாக இந்த காலடிச் சுவடுகள் காணப்படுகின்றன. இந்தப் பனி மனிதன் சுமார் 10 நிமிடங்கள் கூச்சலிட்டதையும் இந்த பிரிட்டிஷ் கோஷ்டியினர் கேட்டார்களாம்.

மகன் வெளிநாடு சென்றார்

பிரிவு தாங்காத தந்தை தற்கொலை

(யாழ்ப்பாணம்)

தனது ஒரே மகள் வெளிநாடு சென்றுவிட்டதால் அவர் பிரிவைத் தாங்கமாட்டாத தந்தை சுருக்கிட்டுத் தற்கொலை செய்துகொண்டார். இப்பரிதாப சம்பவம் நாச்சிமார்கோவிலடியில் நடைபெற்றது.

சிதம்பரப்பிள்ளை பொன்னுத்துரை (60) வயது என்பவரே இவ்வாறு தற்கொலை செய்துகொண்டவராவர். இவரின் மரணவிசாரணை யாழ் ஆஸ்பத்திரியில் நடைபெற்றபோது இத்தகவல் வெளியாகியது. அவரது மனைவி திருமதி பொன்னுத்துரை சாட்சியமளிக்கையில் கூறியதாவது!

எங்களுக்கு இரண்டு பிள்ளைகள் இருக்கின்றனர். மகன் திருமணம் செய்து தனியாக வசிக்கிறார், மகள் [illegible] செய்தபோது [illegible] வாழ்ந்துவந்தார். அவர் வெளிநாடு செல்ல முற்பட்டபோதெல்லாம் காலஞ்சென்றவர் மறித்துவந்தார். தனது கடைசிக்காலத்தில் மகள் தன்னோடு இருக்கவேண்டும் என்று விரும்பினார். எங்களோடு வசித்துவந்த மகள் திடீரென வெளிநாடு சென்றுவிட்டார். அதனால் வேதனை உற்ற எனது கணவன் சம்பவதினமிரவு கழுத்தில் சுருக்கிட்டுக்கொண்டார். நான் ஓடிச்சென்று கயிற்றை அறுத்து விழுத்திவிட்டு யாழ் ஆஸ்பத்திரிக்கு கொண்டுசென்றபோதும் எம்மால் அவரைக் காப்பாற்றமுடியாமற்போய்விட்டது என்றார்.

மரணவிசாரணை அதிகாரி திரு எஸ் பிரான்சிஸ் தற்கொலை எனத் தீர்ப்பு வழங்கினார். (செ)

உலகம்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

களை நிறுவி சேவையாற்றுகிறது. இக்கழகங்களில் எட்டரை இலட்சம் அங்கத்தவர்கள் அங்கத்துவம் பெற்றுள்ளனர்.

இலங்கையில் ரொட்டறிக் கழகம் ஆரம்பிக்கப்பட்டு 40 ஆண்டுகள் நிறைவு பெற்றுள்ளது. பெருந் தொண்டுகளை நிறைவு செய்துள்ளது. தொடர்ந்தும் நல்லசேவையுரியும்'' என்றார்.

வைபவத்தின் இறுதியில் யாழ் பிரதம தபாலதிபர் திரு பாலசிங்கம் விழாக் குழுவினருக்கு தேநீர் விருந்தளித்துக் கௌரவித்தார். (செ)

தெளிவத்தை ஜோசெப்பின் சிறுகதைத் தொகுதி

(யாழ்ப்பாணம்)

பிரபல மலையக எழுத்தாளர் தெளிவத்தை ஜோசெப்பின் ''நாமிருக்கும் நாடே—'' என்னும் சிறுகதைத் தொகுப்பு நூல் இன்று வெள்ளிக்கிழமை மாலை 4-30 மணிக்கு யாழ்ப்பாணம் றிமர் மண்டபத்தில் வெளியிடப்படும்

கவிஞர் இ. முருகையன் தலைமையில் நடைபெறும் இவ்வெளியீட்டுக் கூட்டத்தில் பேராசிரியர் க. கைலாசபதி, மல்லிகை ஆசிரியர் திரு டொமினிக் ஜீவா ஆகியோர் விமர்சன உரையாற்றுவர்

வைகறை வெளியீட்டின் சார்பில் திரு மு நித்தியானந்தன் வெளியீட்டுரை நிகழ்த்துவார்.

மாற்றம்

(மன்னார்)

மாந்தைப்பிரிவு உதவி அரசாங்க அதிபர் திரு கி குமாரசாமி பூநகரிக்கு இடமாற்றம் பெற்றுள்ளார். (செ)

மரண அறிவித்தல்

அ. சிவப்பிரகாசம்

நல்லூர் அருணாசலம் சிவப்பிரகாசம் காலமானார், இவர் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், ஜெயந்தி, சுகந்தி அவர்களின் தந்தையாரும், கொழும்பு சண்முகம்பிள்ளை அன் சன்ஸ் உரிமையாளர் ஞானசம்பந்தரின் மாமனாரும் ஆவர். அன்னாரின் பூதவுடல் ஈமைக்கிரியைகளுக்காக 15/2, சங்கிலியன்வீதி இல்லத்திலிருந்து இன்று 28-ந் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4-00 மணிக்கு செம்மணி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார் உறவினரும், நண்பர்களும் ஏற்றுக்கொள்ளவும்.

450

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63ம் இலக்க அச்சகத்தில் டிசம்பர் மாதம் 28 ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka under No. QB 5543/78 The Eelanadu P B No. [illegible] Telegram Eelanadu Phone: 389.